If an honest man happens to fall into debt owing to unfavourable circumstances, he will spare no pains to repay it as soon as he can. A servant or employee who is honest never stirks his duty and faithfully performs his share of work bearing in mind that his master pays him for it. An honest trader gives his customers the right value for their money and does not cheat them either by

*With best compliments from:*

**Sri Bharathi Cotton Mills,**

POST BOX No. 6.

RAJAPALAYAM

Scanned with CamScanner

charging more than the proper price or by giving some inferior stuff.

Honesty, like all other virtues, carries its own reward. In the first place, an honest man has nothing to fear in this world, for he is conscious that he is on the path of truth. Consequently he enjoys happiness and peace of mind. Not having done any harm to anyone in any way, an honest man has no enemies. He commands universal love and respect. He enjoys a fair reputation and unbounded credit. An honest trader flourishes in his trade, getting more and more customers, who know that they are sure to get the right thing for their price.

An employee who is honest is rewarded by promotion in service. An honest servant enjoys the confidence of his master, who entrusts to him all that is valuable and momentous. Honesty, however, [illegible] for the honesty [illegible] in the present [illegible] life. It may be that the honesty of man may not be sufficiently [illegible] and [illegible] but there is no denying the fact that [illegible] will be [illegible]. A dishonest man can succeed by fraud and deceit only for a time, for his dishonesty is sure to be found out [illegible] in the eye of God.

Our motto in life should be to seek honest ways. We must certainly not be [illegible] following the course. Further, we should never attempt to pass ourselves as honest, if we are not really so. That is worse than dishonesty. The golden rule to follow would be: "If you seem honest, be honest; if not, seem as you are."

---

"Where there is no honesty, there is no God"

( M. K. Gandhi )

## CHARACTER

"When wealth is lost, nothing is lost;
When health is lost, something is lost;
When character is lost, everything is lost."

With best compliments from

**M. R. S. Radhakrishna Raju**

Managing Partner.



Tel : "RADHA"

Phone : 2478

Universal Trading & Agencies Co.,

Exporters, Cotton Waste & Yarn Merchants

RAJAPALAYAM.

Scanned with CamScanner

# R. R. C.

*K. S. [illegible],*
*III B. Com.*

Repentance comes too late.
All are not saints that go to church.
Jack of all trades is master of none.
Art is long and life is short.
Penny-wise and pound foolish.
All that glitters is not gold.
Look before you leap.
All that begins well ends well.
Ye know on earth, and all ye need to know.
Always speak the truth.
Misfortunes never come single.

Rose is the joy of heaven.
All is not lost that is in peril.
Joy and sorrow are the two sides of life.
Union is strength and Health is wealth.
Spare the rod and spoil the child.

Calm before the storm.
Open rebuke is better than secret hatred.
Lamb at home and a lion at the chase.
Lend your money and lose your friend.
Every tide has its ebb.
Good Homer sometimes nobs.
Every bird must hatch its own eggs.

# MADRAS CHIPBOARDS LTD.,

"SRI BHAVANAM"

1089 / W-20, P. S. K. Nagar,

RAJAPALAYAM.

Phone : Office : 2931
Factory: 2976

Gram : CHIPBOARDS

★

—: Manufacturers of :—

**'LAKSHMI' BRAND**

**Chipboards and Special Veneered Chipboards**

★

Ideal for :

Partitions, False Ceiling Furniture Making etc.,

★

Madras Sales Office :

## MADRAS CHIPBOARDS LIMITED

'Chordia Mansion, Ist Floor

**150-A, Mount Road, Madras-2.**

( Phone : 88640 & 83443 )

★

SRI N. R. KRISHNAMA RAJA,

Cotton Merchants

**Rajapalayam,**

# SEMINAR ON NATIONAL ADULT EDUCATION PROGRAMME











Scanned with CamScanner

# SEMINAR ON NATIONAL ADULT EDUCATION PROGRAMME













Scanned with CamScanner

# அகிம்சை நாள் விழா











# HOSTEL DAY













Scanned with CamScanner

# HOSTEL DAY













Scanned with CamScanner













Scanned with CamScanner

# நன்றிக்கடன்

கு. இராமகிருஷ்ணன், எம். ஏ.
நூலாசிரியர்

பல்லவ மன்னர்களின் ஆட்சிக் கிடைக் காலத்தில் ஓங்கியிருந்த காலம்! கி. பி 615 முதல் கி. பி. 630 வரையிலும் மகேந்திர வர்மன் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்டு வருகிறான். இவன் காலத்தில் சிற்பக் கலைக்கு உயிரூட்டப்படுகிறது! சிறந்த நூலாசிரியனாகவும் விளங்குகிறான் மகேந்திரன்.

சாளுக்கியப் பேரரசனான இரண்டாம் புலிகேசி, பல்லவ வேந்தன் மகேந்திர வர்மனை வென்று காஞ்சியைக் கைப்பற்றிக் கொள்ள விரும்புகிறான். அதற்காக அவன் பல வகையான சூழ்ச்சிகளில் இறங்குகிறான். அந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் மகேந்திர வர்மன் முறியடித்து வருகிறான்.

இந்த நாடகத்தில் வருகின்ற சிம்மவர்மனும், தந்திவர்மனும், மகேந்திர வர்மனுக்குத் தம்பிகளாகப் புகுத்தப்பட்ட கற்பனைப் படைப்புகள்! சிம்மவர்மன் அண்ணன் மகேந்திரவர்மன் மீது அளவற்ற பாசமுடையவன்! அண்ணன் மீது எறும்பு கடித்தால் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத இதயம் அவனுக்கு! ஆனால் தம்பி தந்திவர்மனுக்கோ பேராசை அதிகம். அண்ணன் மகேந்திர வர்மனைக் கொன்று விட்டுக் காஞ்சிக்கு மன்னனாக வேண்டுமெனத் துடிக்கிறான். அதற்காகப் புலிகேசியுடன் தொடர்பு கொள்கிறான். இதைப் பயன்படுத்தியாவது காஞ்சியைக் கைப்பற்றி விடலாமென்று கனவு காண்கிறான் புலிகேசி.

அந்தக் கனவை நிறைவேற்றும் பொருட்டு தன்னுடைய வேவுப் படையைச் சேர்ந்த நால்வரை மஞ்சு என்னும் பெண்ணுடன் தந்திவர்மனைச் சந்தித்து விபரங்களை சேகரித்து வருமாறு அனுப்புகிறான். அவர்கள் நால்வரும் சந்நியாசிகளாகவும், சந்நியாசினிகளாகவும் வேடமிட்டு, காஞ்சி வளநாட்டைச் சேர்ந்த எல்லைப் பகுதிக்குள் நுழைகின்றனர். காஞ்சிக் காவலர்கள், அந்த வேவுக்காரர்களைக் கண்டு பிடித்து மஞ்சுவை மட்டும் கைது செய்து மாமன்னன் மகேந்திரவர்மனிடம் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். யாவற்றையும் அறிந்த அரசன் அந்தப் பெண்ணை சிறை வைக்கச் சொல்கிறான். மற்ற மூன்று வேவுக்காரர்களும் தந்திவர்மனைச் சந்தித்து முறையிடுகின்றனர். இதனால் தந்திவர்மனுடைய ஆத்திரம் மிகுதியடைகிறது! தனக்கு உதவியாக அண்ணன் சிம்மவர்மனைத் தன்னோடு சேர்த்துக் கொள்ள எண்ணுகிறான்!

ஆனால், சிம்மவர்மனோ, தம்பியின் ஆசை வலைக்குள் விழுந்து விடாமல், அண்ணன் மகேந்திரவர்மனுக்காக, போர்க் களத்தில் உயிரைக் கொடுத்தாவது நன்றிக் கடனைச் செலுத்தப் போவதாகக் கூறுகிறான்.

இனிமேல் நாடகத்துக்கு வருவோம்!

நன்றி

★

Scanned with CamScanner

மகேந் :- (சினத்துடன்) என்ன சொன்னாய் — நாக்கில் நாணமில்லாதவனே! (பற்களை நறு நறுவென்று கடித்தல்) தம்பியாக இருப்பதால் தப்பித்துக் கொண்டாய்! என்னைப் பார்த்து என்ன சொல்ல முடியும்? பாராண்ட பரம்பரைக்கு நாடாளத் தெரியாதா? தேராண்ட வேந்தனுக்கு திசைப் போக்குத் தெரியாதா? போராண்ட இனத்துக்கு விழுப் புண்கள் தெரியாதா? புத்திகெட்டவன் தான் பொல்லாங்கு பேசுவான்! அந்த வரிசைக்கு நீயும் போய் விடாதே!

தந்தி :- அமைதி அடையுங்கள் அண்ணா, அமைதி அடையுங்கள்! வேந்தனுக்கு அழகு வெறுப்புச் சொல்லையும் பொறுத்துக் கொள்வது!

மகேந் :- எந்த வேந்தனும் எந்தப் பழியையும் பொறுத்துக் கொள்வான்! ஆனால், வீரத்தையும் அவன் இனத்தையும் பழித்தால் — பொறுமை வராது!

தந்தி :- கேவலம், ஒரு பெண்ணால் போர்க்களமாகி விடக் கூடாது — இந்த மண்!

மகேந் :- காஞ்சித் தலைவனுக்கு தன்மானம் தான் பெரிது! அவர்கள் நம் இனத்தைப் பழித்தார்கள். — அது என் இதயத்தையே கடித்து விட்டது! தம்பீ, எனக்கு நாடு பெரிது! அதைவிட இனம் பெரிது! அதைவிட மொழி பெரிது! இதைவிட அந்தப் பெண் பெரிதல்ல! ஆகையால் அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்!

தந்தி :- அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள் .... ?

மகேந் :- நம்மை இழித்துப் பேசியது தவறு! நம் நாட்டுக்குள் நுழைந்ததும் தவறு! அதற்கெல்லாம் அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் ...

தந்தி :- மன்னிப்புக் கேட்க மாட்டார்கள்!

மகேந் :- அப்படியானால் அந்தப் பெண்ணையும் அவர்கள் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்!

தந்தி :- இப்படியே சொல்லட்டுமா?

மகேந் :- அப்படியே சொல்! அதற்கு முன்னால் ஒரு சந்தேகம் — நீ தூதுவனா? அல்லது துரோகியா?

தந்தி :- (திடுக்கிட்டு) அண்ணா என்னையா அப்படிக் கேட்கிறீர்கள்.

மகேந் :- நீ தானே நிற்கிறாய்.

தந்தி :- தப்பு அண்ணா! உங்கள் உடம்பில் ஓடுகின்ற இரத்தம் தான் என் உடம்பிலும் ஓடுகின்றது.

Scanned with CamScanner

மகேந் :- இரத்தம் ஓடுவதில் உண்மை இருக்கலாம்! ஆனால், அதில் உணர்ச்சி ஓடவில்லையே ...

தந்தி :- சண்டை வேண்டாம்; சமாதானமாகப் போய் விடுவோம் என்று சொல்வதால் என்னைச் சண்டாளனுக்குகிறீர்களா ...?

மகேந் :- இல்லை, இல்லை தொல்லை தரும் சண்டை இல்லாமல் போய் விட்டால், மகிழ்ச்சி கொள்வதில் நானும் ஒருவன்! ஆனால், போருக்கு பயந்து, பகைவர்களின் பாதங்களில் பணியச் சொல்கிறாயே — அதைத்தான் வெறுக்கிறேன்!

தந்தி :- சமாதானமாக போய் விடுங்கள் என்று தான் சொன்னேன்! சரணடைந்து விடுங்கள் என்று சொன்னேன் ...

மகேந் :- அந்தப் பெண்ணை விட்டு விடுங்கள் செய்த தப்புக்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னாயே .. அது சமாதானமா? அல்லது சரணடைவதா?

தந்தி :- மன்னிப்புக் கேட்கமாட்டார்கள்; ஆனாலும் பெண்ணை விட்டு விடுங்கள் என்றுதான் சொன்னேன்.

மகேந் :- நண்பர்களாக வந்திருந்தால் அவர்களை அன்பாக வரவேற்றிருப்பேன்! என் அனுமதி இல்லாமல் அகம்பாவத்துடன் நாட்டுக்குள் நுழைந்தது. மட்டுமல்லாமல் நம்மையே இழித்தும் பழித்தும் அவமானப்படுத்தியவர்களைத் தண்டிக்காமல் கண்டிக்காமல் விட்டு விடு என்று சொல்வதற்கு என்ன அர்த்தம்? இதற்குப் பெயர் சரணமா அல்லது சமாதானமா?

தந்தி :- அண்ணா, உங்களிடம் பேசி வெல்ல முடியாது. முடிவாக என்ன சொல்கிறீர்கள்....

மகேந் :- முடிவைத்தான் சொல்லிவிட்டேனே — அவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று!

தந்தி :- அண்ணா, பிடிவாதம் வேண்டாம்! கொஞ்சம் விட்டுக் கொடுங்கள்...

மகேந் :- தம்பி! விட்டுக் கொடுக்க என்ன இருக்கிறது? மானம் ஒன்றுதான் இருக்கிறது! அதையும் விட்டுக் கொடுக்கவா? தந்தி உன்னை விட்டு அவர்கள் விளையாடுகிறார்கள்! நீ விலையாகிவிடாதே!

தந்தி :- நானென்ன விலைப்பொருளா?

மகேந் :- அப்படி ஆகக் கூடாது என்று தான் சொல்கிறேன்!

தந்தி :- ஆகமாட்டேன் அண்ணா! அது உறுதி!

மகேந் :- சொல்லோடு விட்டு விடாதே! உள்ளத்தில் ஒட்டி வைத்துக் கொள்!

Scanned with CamScanner

தந்தி :- மன்னிப்புக் கேட்கவேண்டும் அவர்கள்! இல்லாவிட்டால்...

மகேந் :- போர்! சொல்லிவிடு-போ!

தந்தி :- அந்தப்போரில் சூழ்ச்சி இருக்காதே!

மகேந் :- காஞ்சி வேந்தனை மறுபடியும் அவமானப் படுத்திவிட்டாய்! உறவு தடுக்கிறது — உன் கழுத்தைத் திருகிவிடக் கூடாதென்று! அறிவு கெட்டவனே கேள்! போர்க் களத்துக்குப் போனாலும் காஞ்சித் தலைவ நேர்க்களத்தில் தான் தி பான் — சந்தேகப் படாம போ ..!

தந்தி :- நன்றி அண்ணா! வருகிறேன்

மகேந் :- (எதுவும் பேசாமல் கை சைகையால் போக அனு மதித்தல்)

## காட்சி 2

இடம் :- தந்திவர்மனின் அரண்மனை!

உறுப்பினர்கள் :- தந்திவர்மன்; சிம்ம வர்மன்.

தந்திவர்மன் :- (உலாத்திக்கொண்டே) அண்ணன் தான் அரசாள வேண்டும் - தம்பி அரசாளக் கூடாதா? நாட்டைக் கொடுத்துவிட்டுநல்லவிதமாக ஒதுங்கிக்கொள்வான் என்று பார்த்தால் வீரம் பேசிக் கொண்டிருக்கிறான் - விவேக மில்லாதவன்! இன்றைக்கு மகேந்திரன் நாளைக்கு அவன் மகன் அரியணை என்ன அவர் களுக்கே அடமானமா? மகு டத்துக்கு அண்ணன் மதிப் புக்கு அவன் பிள்ளை - சொர்க் கம் என்ன அவர்களுக்குச் சொந்தமா ? பட்டத்துக்கு மூத்தவன், பதவிக்கு அவன் பிள்ளை-சட்டம் என்ன அவர் களுக்கே சாசுவதமா? சொல் லிக்கேட்டால் போ, போ, மூளையில்லை என்று முடித்து விடுகிறான்! அப்படிப்பட்டவன் எனக்கு அண்ணா - அறிவில் லாத நாக்கே, இன்னுமா அவனை அண்ணனென்று அழைக்கின்றாய்? எப்போது அரியணை கிடைக்கும் என்று எதிர் பார்த்த வேளையில் எங் கிருந்தோ வந்து சேர்ந்தான் புலிகேசி! சரியான சூழ்ச்சி! மகேந்திரனுக்கு வீழ்ச்சி! தந்தி வர்மன் விளையாட்டுப் பொரு ளல்ல-உன்னை வெட்டிடும் வேந்தன்! காஞ்சியை ஆள போகும் காவலன்! அவனையா இரக்கமில்லாதவன் என்று கேட்டாய்? அவனையா உணர் வில்லாதவனென்று உ றாய்! அவனையா துரோகி என்று தூற்றினாய்? காட்டி விடுகிறேன் பார்-இன்னும் சில நாட்களில், யாருக்கு உணர்வில்லை என்று! தந்தி இந்த நாட்டுக்கு வேந்தன்

Scanned with CamScanner

காமல் சாகமாட்டான்! மகேந்திரா, உன் வருங்காலப் பரம்பரையையே அழித்துவிடுகிறேன் பார்! நாடு, இனம், மொழி என்று கொக்கரித்தாயே - கூறு கெட்டவனே! நாடுதான் உனக்கு நன்றி காட்டப் போகிறதா? இனம் தான் உனக்கு இன்பம் கொடுக்கப் போகிறதா? மொழி தான் உனக்கு வழிகாட்டப் போகிறதா? பைத்தியக்காரா? எனக்குப் பெரிது-நாடல்ல! எனக்குப் பெரிது-இனமல்ல! எனக்குப் பெரிது-மொழியல்ல! இந்த நாட்டுக்கு வேந்தனாகப் போகும் உரிமை! இந்த மண்ணுக்கு மன்னனாகப் போகும் பட்டம்! அது மட்டும் கிடைத்து விட்டால் - உன் ஆணவத்தை அழித்து விடுவேன்! (தாழ்ந்த குரலில்) இதற்கெல்லாம் நான் சதி செய்தே ஆகவேண்டும்! சிம்மவர்மனுக்கு ஆசை காட்ட வேண்டும்! அவனை அரசனாக்கி விடுவதாகச் சத்தியம் செய்யவேண்டும்! விழுந்து விடுவான் வலைக்குள்! இருவரும் சேர்ந்தே மகேந்திரனைக் கொன்றுவிடலாம்- புலிகேசியின் ஆதரவு இருப்பதால்! பிறகென்ன சிம்மனைக்கொல்லவா முடியாது! எனக்கு விரோதிகளே இருக்க மாட்டார்கள்! காஞ்சி மன்னனாக மகுடம் சூட்டிக்கொள்வேன்! பராக்குச் சொல்வதற்குப் பத்துப் பேர்கள்! கொடிதூக்கி நடக்க பத்துப் பேர்கள்! இத்தியாதிகளுடன் என்னைக் கண்டதும் தலை தாழ்த்தி நிற்கும் அமைச்சர்கள்! அவர்களுக்குப் பின்னால் அதிகாரிகள்! வெண்சாமரம் வீசப்பட-கையில் செங்கோல் ஏந்தி, அரியணையில் நான்! அந்த நாள் வருமா? அது எப்போது?

சிம்ம :- (வந்து) தந்திவர்மா

தந்தி :- வாருங்கள் அண்ணா வாருங்கள்! தம்பியின் தலைதாழ்ந்த வணக்கம் (வணங்குதல்)

சிம்ம :- பெரியவரைப் பார்க்கச்சென்றிருந்தேன்! வழியில் உன் அரண்மனையும் குறுக்கிட்டதால், அப்படியே உன்னையும்...

தந்தி :- நல்லது அண்ணா! நானும் துடித்துக் கொண்டிருந்தேன், உங்களைப் பார்க்க!

சிம்ம :- என்னைப் பார்க்கவா? எதற்காக? ஏதாவது தூது செல்ல வேண்டுமா?

தந்தி :- தூதா (சிரித்தல்) இனிமேல் நம்மைத்தான் சந்திக்கக் காத்துக் கொண்டிருப்பார்கள் தூதர்கள்?

சிம்ம :- இப்போதுதான் தூங்கி எழுந்தாயா? உன் பேச்சில் பொருளைக் காணோமே!

தந்தி :- புரியவில்லை என்றால் திருப்பிக் கேளுங்கள் - அதற்காகப் பொருள் இல்லை என்று சொல்லி என்னைப் பித்தனாக்க வேண்டாம்!

சிம்ம :- குழம்புகிறாயா? அல்லது குழப்புகிறாயா?

தந்தி :- இப்போதைக்கு இரண்டும் இல்லை! ஆனால், அரசியல் குழப்பவாதிகள் இல்லையென்றால் அரசாங்கம் ஒழுங்காக நடக்காதே!

சிம்ம :- அப்படியா! ஒன்று செய்-மற்றவர்களைக் குழப்பாமல், நீ மட்டும் குழம்பிக்கொண்டிரு! வருகிறேன்...

(நடக்க எத்தனித்தல்)

தந்தி :- நில்லுங்கள் அண்ணா! அதற்குள் என்ன அவசரம்? பேச வேண்டிய விசயத்தை இன்னும் தொடவில்லை ..

சிம்ம :- (புரியாமல்) பேசவேண்டிய விசயமா?

தந்தி :- ஆமாம் அண்ணா, கேட்டு விட்டுச் சொல்லுங்கள்! முடியாவிட்டால் செல்லுங்கள்!

சிம்ம :- ஆரம்பிக்கலாமே...

தந்தி :- அண்ணா, கனவு கண்டேன்- அது அதிசயமானது! ஆனால் நடக்கக் கூடியதுதான்...!

சிம்ம :- (மேலும் புரியாமல்) கனவு- அதிசயம் - நடக்கக் கூடியது! என்ன உளறுகிறாய்?

தந்தி :- கொலுமண்டபம்! வரிசையாக அமர்ந்திருக்கும் அறிவுசான்ற அமைச்சர்கள்! குத்திட்ட வேலோடும்- ஒத்திட்ட நிழலோடும் கம்பீரமாக நிற்கின்ற காவலர்கள்! கப்பத்தைக் கொட்டிக் கைகட்டி நிற்கும் பிற நாட்டுக் குறு மன்னர்கள்! ஒளி சிதறி வழிகாட்டும் அரியாசனம்! அதிலே தங்கத்தின் அங்கமாம் எங்கள் அண்ணன் சிம்மவர்மன் மன்னனாக அமர்ந்திருக்கும் கண்கொள்ளாக் காட்சி! அதைக்கண்டு பூரித்துப் பொங்கி மகிழும், விவேகத்தம்பி தந்திவர்மன்...

சிம்ம :- (பலமாகச் சிரித்தல்)

தந்தி :- என்ன சிரிக்கிறீர்கள்?

சிம்ம :- (மீண்டும் சிரித்தல்)

தந்தி :- அண்ணா, அவமானப் படுத்தாதீர்கள்! சொல்லிவிட்டுச் சிரியுங்கள்...

சிம்ம :- தந்திவர்மா இத்தனை நாளும் உன்னை வீரத்தம்பி என்று மட்டும்தான் எண்ணி இருந்தேன்! இப்போது நீ கற்பனை மிகுந்த காவியத் தம்பியாக இருப்பது கண்டு ஆச்சரியம்! மிகப்பெரிய ஆச்சரியம்.

தந்தி : அரசியல் சித்தாந்தங்களும், அரசியல் விளையாட்டுக்களும் அப்படித்தான் தோன்றும்-கற்பனைகளைப் போன்று! அண்ணா இப்போது கற்பனையைச் சொல்லவில்லை நான்..

சிம்ம :- கனவைச் சொன்னாயா ..!

தந்தி :- அதுவுமல்ல! நடக்கவிருக்கும் நிகழ்ச்சி நமக்குப் பயன் தரும் மகிழ்ச்சி!

சிம்ம :- அண்ணன் மகேந்திரன் இருக்கும்போது அரியாசனத்

தில் நானா...? தலை இருக்கும் போது வாலுக்கு என்ன வேலை?

தந்தி :- தலை தளர்ந்து விட்டால் வாலுக்கு உண்டு வலிமை!

சிம்ம :- (சினத்துடன்) தந்திவர்மா! தறுதலையே! விலை மதிப்பிலாத தங்கத்தை - அன்பின் வடிவத்தை - அறிவின் அடக்கத்தை - அண்ணன் மகேந்திரனையா குறைசொன்னாய்! இதற்குள் உன் குறைமதி கொண்ட தலையைக் கிள்ளியல்லவா எறிந்திருக்க வேண்டும் - இந்தக் கைகள்.

தந்தி :- ஆத்திரம் எதற்கு? அறிவைத் திறந்துவிடுங்கள்! உங்களுக்கு இருக்கும் உணர்ச்சி இல்லாமல் இல்லை. எனக்கும் —

சிம்ம :- அப்படிப்பட்டவனா இப்படிச் சொன்னாய்? நாக்கில் நரம்பில்லை-உடம்பில் உயிரில்லை, உன்மத்தமா உனக்கு?

தந்தி :- எனக்குப் பைத்தியம் என்றால் உங்களுக்கும் பைத்தியம் தான்...

சிம்ம :- என்ன பிதற்றுகிறாய்...?

தந்தி :- மூவர் உடன் பிறந்தவர்களாக இருந்தும் மகேந்திரன் மட்டும்தான் காஞ்சி மன்னனா? அரசபோகங்களை அவர்மட்டும்தான் அனுபவிக்கவேண்டுமா? எதிர்காலம் அவருடைய பரம்பரைக்குத்தான் என்றால் அவருக்குத் தம்பிகளாக இன்னும் இருக்கத்தான் வேண்டுமா...?

சிம்ம :- தந்தி, ஏன் இந்தத் தீய புத்தி? அண்ணனின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள் நாம்! அப்படிப்பட்ட உனக்கா இந்தச் சிந்தனை? அறிவுகெட்டவனே மக்கள் மதிக்க மாட்டார்கள் உன்னை...

தந்தி :- மக்களைப்பற்றி உங்களைக் காட்டிலும் நன்றாக அறிவேன்! அவர்கள் மாட்டு மந்தைகள்- மண்டியிட்டுத்தான் கிடப்பார்கள்! எந்த நாட்டிலும் அரியணைக்கு வருகின்றவர்கள் உடன் பிறப்புக்களை ஒழித்துவிட்டுத்தான் முன்னுக்கு வருகின்றார்கள்! மகேந்திரனுக்குப் பின்னாலேயே. நாம் இருந்தால் நம்முடைய புகழ் இந்த உலகத்துக்குத் தெரியாமலேயே போய்விடும்! நாளைக்கு வருகின்ற மக்கள் வீரத்தை விலை பேசிவிட்டான் தந்திவர்மன் என்று சொன்னாலும், எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை! புலிகேசிக்குப் பின்னால் நின்று மகேந்திரனை எதிர்க்கத்தான் போகிறேன்! உங்களுக்கு அரியணை வேண்டுமென்றால் என்னோடு வாருங்கள் அண்ணன் தான் வேண்டுமென்றால் அங்கேயே போய்விடுங்கள்...

சிம்ம :- (சினத்துடன்) கேடுகெட்டவனே! நாடுகாக்கும் நல்லவனுக்குத் துரோகமா? இனம் காக்கும் இதயக் கோவிலுக்குச் சதியா? மொழி காக்கும் வீரத் தலைவனுக்குச் சூழ்ச்சியா? அறிவு கெட்டவனே! அரசக் கட்டிலைக் காட்டி மோசக் காட்டுக்கு அழைத்துச் செல்லும் வஞ்சகனே!

Scanned with CamScanner

நீ... உடன் பிறந்தே கொல்லும் வியாதி! மகேந்திரனையே கொல்லத் துணிந்த நீ, என்னையும் விட்டுவைக்கவா போகிறாய்? நன்றி கெட்டவனே! அந்த வேலைக்கு மென்றும் முசு அறிவித்து முடிக்கவிடு! அதைத்தான்டு அரியணையை விட்டு இறங்கி, அண்ணனே வாழ்கிறார்! அதை விடுத்து விட்டு நய வஞ்சக நாடகமா நடிக்கின்றாய்? கொடுக்கும் உணவில், சுவையைத் தடுக்கும் கல் கிடைத்தால், அதைத்தானே உண்டு. நமக்கு அனுபவம் உண்ட பொறுத்த அண்ணனையா அழிக்கப்போகிறாய்? தாய் தந்தைக்குப் பிறகு, தன்னுடைய தலையைக் கூறுபோட்டு மனக்குறை தருகிற இடத்தில் வைத்து. தம் கண்ணைப் போல் காத்து வந்த மகேந்திரனையா கொல்லப்போகிறாய்? தம்பிகள் தாய்க்குப் போதும் என எண்ணி, பாசத்தை உணர்த்தி உடன்பிறப்பைத் தந்து. அந்த நன்றிகளை, இந்த நாட்டு போனதை, அன்பு காட்டி காத்து வந்த தலைவனையா இழக்கப்போகிறாய்? தந்தையை உன்னைப் போன்று கேட்டுக்கொள்கிறேன்! உன் நெஞ்சில் விளைந்துள்ள நச்சு விதைகளை எடுத்துவிடு! வஞ்சகம் வாழாது! செய்நன்றி மறக்காதே!

நந்தி :- அண்ணா! உங்கள் அறிவுரைகளை மதிக்கின்றேன்! கேட்டு மகிழ்கின்றேன்! ஆனால் காலம் இல்லை! இப்போது கேட்பது என் தோழா? அண்ணனை தோழா...!

சிங்கம் :- நந்தி மழுங்கினால் கூர்மையாக்கலாம்! புத்தி மழுங்கினால் கூர்மையாக்கமுடியாது! நந்தி வர்மா? உன்னைத் திருத்த என்னால் இயலாது! அண்ணனுக்கு துரோகம் செய்து, உண்டு, மேன்மையும் விளைத்துக் காட்டினும், போர்க்களம் புகுந்து, புறம் கண்டு விட்டு, நன்றிக் கடனாக உயிரை விட்டான் சிங்கம் என்று உலகம் போற்றும்! உலகம் போற்றும்!!

## சமர்ப்பணம் :

ச. பாலசுப்பிரமணியன்,
II பி. ஏ.,

# இராஜபாளையம் (ராஜுக்கள்) வரலாறு

ஊர்களில் பலவகை உண்டு. சில கோவில்களால் புகழ்பெற்றவை. சில புராணங்களால் பெருமையுற்றவை. மற்றும் நதிகளால் புனிதமுற்றவையும், சரித்திரங்களால் சிறப்படைந்தவையுமுண்டு. பிரசித்திபெற்ற எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும் மேற்கூறியவைகளில் ஏதேனும் ஒன்று அந்த ஊரின் பெருமைக்கு காரணமாக அமைந்திருக்கும். இதற்கு விதிவிலக்காக விளங்குகிறது இராஜபாளையம்.

வரலாற்றுப் புகழ்பெற்ற சில நகரங்களின் அடையாளங்களைக்கூட இன்று நாம் பார்க்க முடிவதில்லை. வேறு சில ஊர்கள் இருக்கின்றன என்றும் ஒன்று போல் அன்றிருந்த அதே திருமேனியுடன், மற்றும் சில ஊர்கள் உள்ளன ஜீவகளையுடன் விளங்குபவை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ச்சியுற்று வளம் பெற்று வருபவை. இந்த வகையைச் சேர்ந்தது இராஜபாளையம். ஜீவகளை ததும்பும் திருநிறைந்த நகரம்.

இன்று தமிழக நகரங்களில் ஒரு பெயர் பெற்ற நகரம் என்று பாராட்டப் படும் இராஜபாளையம், பதினாரும் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர்கள் ராஜுக்கள். இராஜபாளையத்தின் ஸ்தாபகர்கள் ராஜுக்களே என்று, "தென் இந்தியாவின் வம்சங்களும் ஜாதிகளும்" [The castes and Tribes of Southern India] என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் இராஜபாளையத்தின் சுற்றுப்புறங்களிலும் பல ராஜுக்களின் காலனிகள் இருந்ததாகவும் அதன் ஆசிரியர் "தர்ஸ்டன்" எழுதியிருக்கிறார். இராஜபாளையத்தைத் தோற்றுவித்தவர்கள் பூசப்பாடியினர் என்றும் அவர்கள் விஜயநகர சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாள் ராஜா என்பவர் கி. பி. 1446ல் "பூசப்பாடி" என்னும் கிராமத்திற்கு தலைவராவார். இது கிருஷ்ணா ஜில்லாவிலுள்ளது. பின்னர் அவர் தமது கிராமத்தின் பெயராலேயே தமது வம்சத்

Scanned with CamScanner

தினருக்கு ''பூசப்பாடி'' என்ற பெயரை வீட்டுப் பெயராக வழங்கச் செய்தார். நாளடைவில் அவர்களின் ''எஸ்டேட்டு'' களும் அவர்களது வீட்டுப் பெயராலேயே அழைக்கப்படலாயிற்று. இதே போன்று ''கொட்டிமுக்கலூர்'' ''ஏரகொண்டக்'' போன்ற பல எஸ்டேட்டுகளும் இருந்திருக்கின்றன.

மேலே கூறிய எஸ்டேட்டுகளைப் பற்றி விரிவான வரலாறு இல்லையெனினும் அவைகளின் அதிபர்கள் போர்த்தொழிலில் புகழுடன் பிரகாசித்து வந்திருக்கின்றனர் என்று தெளிவாகத் தெரிகிறது. பூசப்பட்டி எஸ்டேட்டின் அதிபர் ''அப்பாள் ராஜா''விற்குப்பின் அவரது சந்ததியார்களின் சிலரது வரலாறு தெளிவாகத் தெரியவில்லை, பிறகு ''தம்பி ராஜா''வின் காலத்திலிருந்து ''பூசப்பாடி'' வரலாறு மிகத் தெளிவாக உள்ளது.

பூசப்பாடி எஸ்டேட்டின் பெருமைக்குக் காரணமான தம்பிராஜாவின் சிறிய பாட்டனாரே இராஜபாளையம் வந்த முதல் ராஜா. இவரது பெயர் கிருஷ்ணமராஜா. இராஜபாளையம் வந்த முதல் ''ராஜா'' வின் குடும்பத்தினரிடம் இருக்கும் வம்சா வழியில் ''தம்பிராஜா'' என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விஜயநகர சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்புமிருக்கிறது. ஆனால் இங்கு வந்த ராஜா விஜயவாடாவிலிருந்து வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இன்கூறிய விஜய நகரத்தை நினைத்துக்கொண்டு ''விஜய வாடா'' என்ற குறிப்பைக் காணும் பொழுது குழப்பம் ஏற்படுவது இயற்கை. ஆனால் நாம் முன் குறிப்பிட்டபடி இக்குறைய விஜயநகர சமஸ்தானம் 1713க்கு முன் கிருஷ்ணா ஜில்லாவில் பூசப்பாடி எஸ்டேட் என்ற பெயரால்தான் விளங்கி வந்துள்ளது என்பதை நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். தம்பி ராஜாவின் முன்னோர்களில் சிலர் விஜயவாடாவில் இருந்திருப்பதாக பூசப்பாடி எஸ்டேட்டின் வரலாறு மூலம் தெரிகிறது.

இராஜபாளையம் வந்த ''முதல் ராஜா''வைக் குறித்து விஜயநகர சமஸ்தான வரலாற்றில் எவ்விதக் குறிப்பும் இல்லை. அரசுரிமைக்குப் பாத்தியப்பட்ட தம்பி ராஜாவின் பாட்டனாரைப் பற்றிய விவரங்களே போதுமான அளவு இல்லாதபோது சிறிய பாட்டனாரைப் பற்றிய விவரங்கள் வரலாற்றில் இடம் பெற்றிருப்பது அசாத்தியமே. மேலும் தம்பி ராஜாவின் பாட்டனார் காலத்தில் ''பூசப்பாடி'' எஸ்டேட் சாதாரண நிலைமையில் தான் இருந்திருக்கிறது. இராஜபாளையம் வந்த முதல் ராஜாவின் வம்சாவழி குறிப்புகள் இப்பொழுதும் அவர்களது சந்ததியார்களிடமிருக்கிறது. பூசப்பாடி வம்சத்தினரைப் பற்றிய விவரங்கள் உள்ளது. இது சரித்திர ரீதியாக வரலாற்றுடன் மிக ஒத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1952 ஆம் ஆண்டில் இராஜபாளையம் ''நகரம்'' என அரசினரால் அறிவிக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் ஒரே ''நகரம்'' இராஜபாளையமே. தனிப்பெரும் நகரமாகத் தன்னிகரற்று விளங்கிவரும் இராஜபாளையம் இன்றும் வெவ்வேறு துறைகளில் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டு இருநிறைந்த நகரமாக ஜீவ களையுடன் வளர்ந்து வருகிறது.

Scanned with CamScanner

# திருக்குறள் ஓர் அரசியல் நூல்

ரா. நவநீதகிருஷ்ணசாமி,
III பி. காம்

உலகப் புகழ்பெற்ற வள்ளுவ பெருந்தகை உலகுக்கு அருளிய தேனினும் இனிய அருமறைச் செல்வ மரம் திருக்குறள் ஆகும். மற்றப் பொருள்களைப் போல இல்லாமல் திருக்குறள் காலத்தினால் அழியாத கருவூலம் ஆகும். சாதி வேற்றுமை, மதம் முதலிய வேற்றுமைகளைக் கருதாம். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று ஒரு உயர்ந்த உள்ளத்திலிருந்து எழுந்தது ஆகும். அவருடைய திருக்குறள் படைப்பு உலகுக்கு எல்லாம் உதவக்கூடிய நூலாகும்.

திருக்குறளை அறம், பொருள், இன்பம் என்று மூன்று பகுதிகளாக பிரிக்கிறோம். மேலும் திருக்குறள் ஒரு பொருளாதார நூல் ஆகும். எனவே அது பொருள் என்ற தலைப்பில் அடங்கியுள்ளது. பொருளாதாரம் அரசியலின் முக்கிய அங்கம் ஆகும் எனவே பொருள் இல்லாமல் அரசியல் இருக்கமுடியாது எனவே திருக்குறள் ஒரு அரசியல் நூல் என்பதற்கு 'ஆம்' என சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

மனித வாழ்வு வீடு, வீதி, ஊர், நகரம், நாடு என்பவை விரிந்து காணப்படுகின்றன. இவற்றோடு அரசியலும் இணைந்துள்ளன. குடியாட்சியானாலும், முடியாட்சியானாலும் ஆட்சியே அவசியம். நம்போன்று குடியாட்சி காலத்தில் வாழாமல் முடியாட்சி காலத்தில் வாழ்ந்தவர் வள்ளுவர் ஆவார். ஆட்சி என்பதுதான் அரசியலின் இலட்சியம். அரசியல்வாதியின் இலட்சியம் அதைக் கைப்பற்றுவது தான். வீட்டாட்சி முதல் நாட்டாட்சிக்கு வரும்வரை நடப்பது அரசியல் ஆகும்.

ஒரு நாட்டை ஆளுவது அரசா என்ற கேள்விக்கு பதிலாக பொருள் என்ற தலைப்பில் 70 அதிகாரங்களும் அரசியலைப்பற்றியே கூறுகின்றன.

முதலில் ஒருவன் ஆட்சிக்கு வர வேண்டுமென நினைத்தால் அவனுக்கு வேண்டிய பொருத்தங்களை வள்ளுவர்

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு

என்று கூறுகிறார்.

காலந்தாழ்த்தாத தன்மை, கல்வி யுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்கவேண்டி யனவாகும்,

அரசியலில் வந்து நாடாள வந்து விட்டால்மட்டும் போதாது.

''அஞ்சாமை ஈகை அறிவூக்கம்
இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு''

மேற்கண்ட இந் நான்கு பண்புகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

''ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்''.

என வலிமை மிக்க எமனே வந்தாலும் எதிர்த்து நிற்கும் படை இன்றி எந்நாடும் வாழமுடியாது. தன்மானமுள்ள குடி மக்கள் வேண்டும். மான உணர்வுள்ள மக்கள் இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் அந்நாடே வையத்துழ் வாழ்வாங்கு வாழும் நன்னாடாகும்.

பசி வந்திட பற்றும் பறந்துபோம்

''கொடையளி செங்கோல்
குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி''

எனப் பாடுகிறார்.

அமைச்சு குடியாட்சியானாலும், முடியாட்சியானாலும் அமைச்சின்றி எதுவு மில்லை, அமைச்சு என்ற அதிகாரத்தில் நாம் இதன் முக்கியத்துவத்தை நன்கு உணரலாம். அமைச்சின் பண்புகளை வள்ளுவர்,

''தெரிதலும் தேர்ந்து செயலும்
ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு''

எனப் பாடுகிறார்.

நட்பு?

''உடுக்கை இழந்தவன் கைபோல
ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு—
கூடா நட்பால் விளையும்
தீ நட்பால் விளையும் துன்பம் இவற்றை
ஆராய்ந்து ஆய்ந்த கொள்ளாதான்
கேண்மை நடைமுறை
தான்சாம் துயரம் தரும்''

தனிமனிதனின் முதல் அயல்நாட்டு உறவுவரை அனைவருக்கும் பயன்படும் குறளின் ஆற்றல் என்ன?

மேலும் வள்ளுவர் எவ்வாறு ஆட்சி செய்யவேண்டும் என்பதையும் குறள் மூலம் விளக்குகிறார்.

''ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து
யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை''.

என்று நீதிமுறையோடு ஆட்சி செய்ய வேண்டும் என்கிறார்.

மேலும் ஆட்சி நடத்த தூதுவரின் முக்கியத்துவத்தை தம் குறள்மூலம் தூது வருக்கு வேண்டிய பண்புகளை

''தூய்மை துணைமை துணிவுடைமை
இம் மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு''

எனக் கூறுகிறார்.

வள்ளுவர் ஆட்சி நடத்துவோர் நாட்டின் நிலைமையை அறியும்படி

''பிணியின்மை செல்வம்
விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் ஐந்து''

எனப் பாடுகிறார்.

வரவுக்கு அதிகமான செலவால் நிதி பற்றாக்குறை ஏற்படுவதால் ஆண்டுக் காண்டு நிதி நிலைமையில் பற்றாக்குறை

Scanned with CamScanner

*WITH BEST COMPLIMENTS FROM*

# M/s. Sriram Products
# M/s. Sriram Gelkem Industries P. Ltd.
# M/s. Gitanjali Mills Ltd.
# M/s. Puspanjali Industries P. Ltd.

Managing Director:

P. K. RAMASAMY RAJA

Regd & Administrative Office:

36, Sriram Nagar,

RAJAPALAYAM-626117.

TAMILNADU.

Phones; 2443, 2669, 2065

Grams: SRIRAMS

Scanned with CamScanner

இற்றை நிலை: ஏன்? இக்கால உலகம்
எக்காட்சி வழங்குகிறது செவ்விய பரபரப்
புக்கும், தீய கிளர்ச்சிக்கும், இரத்தப்
புரட்சிக்கும் இரையாகி வருதல் கண்கூடு
என்றாலும், வள்ளுவர் வகுத்த எல்லா
வளனும், நலனும் முற்றிலும் பெற்றிருக்கா
விட்டாலும், யாதும் ஊரே யாவரும்
கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா
நல்லது செய்தல் ஆற்றிராயினும் அல்லது
செய்தல் ஓம்புமின் என்ற அறநெறிக்
கோட்பாடுகளைக் கொள்கைகளாகக்
கொண்டு பாருக்குள்ளே நல்ல நாடாகத்
திகழ்ந்து வருகிறது நமது பாரதம்.
பாருக்குள்ளே நல்ல பல - அமெரிக்கா
வென்றும், உருசியாவென்றும், இங்கி-
லாந்து என்றும் செர்மனி என்றும் நாடு
கள் "பெரும் பொருளால் பெளதக்கது
ஆகி அருங்கேட்டால் ஆற்ற விளைவும்
வாய்ப்புகள் பெற்றிருந்தாலும், முன்னர்
குறிப்பிட்ட நல்லது செய்தல் ஆற்றிரா
யினும் அல்லது செய்தல் ஓம்பாத கார
ணங்களால் அவையெலாம் நாடாகக்
கருதப்பட இல்லை. நாட்டிற்காக,
அமெரிக்கா அனைத்து வளம் பெற்றிருந்த
போதிலும் வியட்நாம் போரால் தாழ்ந்த
நிலையை பாரில் அடைந்து வருவது
வெள்ளிடை மலை. இதர நாடுகளும் இதே
போல் இயங்கி வருதல் தெளிவு.

ஆனால் நமது தாயகமோ எந்த நிலை
யிலும் மனிதாபிமானத்துடன் நடந்து
தனக்குரிய பழம் பெருமையைக் குன்றி
விட்ட விளக்குபோல ஒளிரச் செய்து
வந்தது, வருகிறது இனியும் வரும் என்
பதை அண்மையில் நடந்து முடிந்த
பாகிஸ்த்தான் - இந்தியப் போர்க் காரணங்
களும், முடிவும், அகங்கை நெல்லிக்கனி
யென அழகுற எடுத்துக்காட்டும். தன்
நாட்டுமக்களுக்கு உரிய வசதிகளை உண்
டாக்கித் தரக்கூடும் முயற்சியில் எண்ணி
யர் எண்ணியாங்கு எய்தும் - எண்ணியர்
திண்ணியராகப் பெறின் என்ற வழியில்
ஈடுபட்டிருக்கும் காலையில் கூடப் பிற
நாட்டுப் பொருள்களைக் கவர வேண்டும்
என்ற எண்ணம் இஞ்சித்தேனும் இன்
றிச் செயல்பட்டு வந்திருக்கிறது என்
பதை நவில்தொறும் நவில்தொறும்
நாமெல்லாம் தலைநிமிர்ந்து செம்மாந்து
நிற்கிறோம். பாருக்குள்ளே உள்ள
அனைத்து நாடுகளும் வாயார, நெஞ்சார
வாழ்த்துகின்றனர். நம்முடைய அயல்
நாட்டுக் கொள்கையை வரவேற்கின்ற
னர். நம் தலைவர்களை வாழ்க! வாழ்க!!
நீடூழி வாழ்க! என வாழ்த்துப் பாமாலை
பாடிக் களிக்கின்றனர். அந்தக் களிப்பில்
நாமும் திளைக்கிறோம். அந்தத் திளைப்பில்
பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடு
என்ற புகழை தட்டிச் சென்றுவிடுகிறது.

**கல்வியில் கண்டோம் ;** அடிமை
யாகி, உரிமையிழந்து வாழ்ந்ததால் நலி
வுற்ற நலிவை ஈடுகட்ட பல துறையிலும்
ஐந்தாண்டுத் திட்டங்கள் தவிர, பல திட்
டங்களைத் திட்டமிட்டுத் தீட்டிச் செயல்
படுத்தி வருவது நாம் அனைவரும் அறி
வோம். கல்விக்கும், பொருளாதாரத்திற்
கும் வேளாண்மைக்கும் அதிக அளவில்
முக்கியத்துவம் அளித்து தள்ளா விளையுளை
யும், தக்காரையும், தாழ்விலாச்செல்வரை
யும்உண்டாக்க அனைத்து ஆக்கமும்

Scanned with CamScanner

அளித்து வைக்கம் காட்டி வருவதால் ...தான் செல்வம் நாம் அடைந்து வரு... கல்வியைப் பொருத்தளவில் ...ல்லையறிவியல் வல்லுநர்களைத் தன் ...த்த உருவாக்கி மேல் நாடுகளுக்கு ...அவர்களைப் பணியாற்ற அளித்து இருப் ...து நமக்குத் தெற்றெனை விளங்கும். அது நம்முடைய தன்னணி என்றும் அதில் ...க்கு என்துணையேனும் ஐயத்திற்கு இடமில்லை

**ஆன்மநேய வலிவு:** என்னனிறந்த மதங்களும் பிரிவுகளும் இருப்பினும் எந்த ...த மனக்காழ்ப்புமின்றி அன்பால் பிணைக் கப்பட்டு வாழ்ந்து வருகிறோம். இந்தியா ஒரு மத சார்பில்லாத நாடு (India as a Secular State) என்று ஒரே மதத்தை ...டைய மக்களைத் தன்னகத்தே தாங்கி ...ழும் அனைத்து நாடுகளும் அழகுறப் பாராட்டுகின்றன என்பதை நாம் செவி மடுக்கும்போது கண்டு வாழும். முகமதி யர்களும், கிறித்தவர்களும், இந்துக்களும் உடன் பிறப்புரிமையால் உள்ளங்களிக் கின்றனர். நமது நாட்டு மதத்தலைவர்கள் உருசியா, அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் வரவேற்று அவர்களுடைய கருத்துக்களைக் கேட்க இசைகின்றனர். ...ன்றால் நாம் அனைத்து நிலையிலும் ...ந்து விளங்குகிறோம் எனலாம்.

**[illegible]:** பிற நாட்டு கல்லறிஞர் ...திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த் ...க வேண்டும். இறவாத புகழுடைய புது நாவல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்ற பைந்தமிழ்ச் சாரதியின் கனவுப்படி நம்மவர்கள் கலையின் காரண மாக பிற நாட்டார் நம் கலையில் ஈடுபாடு காட்டி வரவேற்றதன் காரணமாக இயல் இசை, நாடகமென முத்தமிழிலும் மட்டு மின்றி நடனம், நாட்டியம், சிற்பம் இன் னோரான துறைகளில் ஆன்றவிந்தடங் கிய அரும் பெரும் திறல் பெறு நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆன்றோர்கள் சென் றிருக்கின்றனர் எட்டுத்திக்கும்: கலைச் செல்வங்கள் யாவும் கொண்டு வந்து ஈண்டு சேர்க்கின்றனர். காட்டாக ஒன்று கூறலாம் தில்லையம்பலக் கூத்தப்பெருமா னின் சிலைகள் மேலை நாடுகளிலும், கீழை நாடுகளிலும் உயரிய மதிப்பைப் பெறு கின்றனவாம் அவை விரும்பி வரவேற்று வாங்கப் பெற்று பொருட்காட்சிகளிலும், கலைக்கருவூலக் காப்பகங்களிலும் வைத் துப் போற்றப் பெறுகின்றனவாம் என்று கேள்வியுறும் போது உண்மையிலேயே "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்ற உணர்ச்சிதான்.

**[illegible]:** ஆற்றினிலே சுனையூற்றினிலே, தென்றல் காற்றினிலே சேற்றினிலே ஏற்றினிலே பயன் மலைப் பேற்றினிலே ஈன்றிடும் காய் இனத்திலே, தோட்டத் திலே மரக் கூட்டத்திலே கனி ஈட்டத் திலே

பயிர் வளர்ச்சியிலே தோட்டத்திலே அடங்காத நதியின் சிறப்பினிலே உயர் நாடு இந்தப் பாரத நாடு வெள்ளிப்பனி மலைகளும் முத்துக்குளிக்கும் கடல்களும், மொய்த்து வணிகர் பல நாட்டினர்களும் வந்து வணிகம் செய்து பன்னாட்டுத் தொடர்பு கொண்டுள்ள நம்நாடு எல்லா நிலைகளாலும் உயர பாரத அரசு-இந்திய அரசு ஆவன செய்துள்ளது. நன்மையிலே உடல் வன்மையிலே செல்வப் பன்மையிலே மறத்தன்மையிலே பொன் மயிலொத்திடு மாதர் தம்கற்பின்-தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவன் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்று கற்பின் புகழினிலே உயர்ந்து விளங்கி ஏனை நாடுகளின்றும் இப்பண்பால் வேறுபட்டு நிற்கும் நமது நாடு பாருக்குள்ளே நல்ல நாடு.

நம்முடைய உணவுப் பழக்கங்களையும் உடை பழக்கங்களையும் அவற்றைத் தாமும் கடைப்பிடித்தொழுக முயலும் அயல் நாட்டவர்களை கண்டு காணும் போதும் மேல் நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் பெருமையுடனும், பெருமிதத்துடனும், கூறும் போதும் அவற்றைப் பிறநாட்டு மக்கள் வாயிலாக நேரடியாகப் புகழ்ந்து கூறும் புகழ்ச்சி யுரைகளைக் கேட்கும் போதும் நமக்குப் பாரதநாடு பழம் பெரும் நாடு நீரதன் புதல்வர் இந்நினை பகற்றுநீர் என்று நம்செவிப் பறையில் விழுவது குழலினிது யாழினிது என்ற உணர்வு தான் நமக்கு ஏற்படுகிறது. உண்மையிது வெறும் புகழ்ச்சியில்லை.

**முடிவுரை:** பல்வளமும், படைத்து அளித்துத் துடைக்கினும் ஓர் எல்லையு பரம்பொருள் நிலையாக இருப்பதை போலப் பாரதநாடு தனிப் பெரு நாடாக தனிக்கென தனி நிலையை செம்மாந் நிலையை இக்கண்ணகன் ஞாலத்து வகுத்து வந்திருக்கிறது. ஒப்பில்லா உலகத்துக்கொரு புதுமையென எல்லோரும் ஓர்குலம், எல்லாரும் ஓரினம், எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை எல்லோரும் இந் நாட்டு மன்னர் என இலங்கு தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேசரை மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வு கொல்? எனவஞ்சினம் விடுத்த சூளுரைபகர்ந்து ஐம்பது கோடியும் வாழ்வோம் வீழில் ஐம்பது கோடியும் வா வோம் என உறுதி பூண்டு அரசு வக்கும் அனைத்துத்துறை திட்டங்களில் ஆடவரும், பெண்டிரும் இணைந்து செயலாற் கல்வி, கேள்வி ஒழுக்கங்களில் சிறந் எல்லா வளமும் பல்கப் பெருக உழைத் துத் தொல்புகழை நிலை நிறுத்தி மென் மேலும் புகழடைய விழைவோம் என கூறிக் கட்டுரையை முடிக்கிறேன்.

வாழிய பாரதம்!

Scanned with CamScanner

# SPORTS DAY










S. V. CHANDRASEKAR

Represented Tamilnadu State Handball team at the 7th Nationals held at Srinagar. (J K.)

Scanned with CamScanner









Scanned with CamScanner

# கல்லூரி மாணவர் மன்றப் பேரவை



எம். வைகுண்டராமன், III B Com.
(கல்லூரி பேரவைத் தலைவர்)



ஆர். ஹரிஹரசங்கரசுப்பிரமணியன் II B.A.
(கல்லூரி பேரவைச் செயலர்)



ஏ. இராமகிருஷ்ணன், II B.Com.,
(வணிகவியல் துறைச் செயலர்)



வி. சசீந்திரன், III B.Com.,
(திறித் துறைச் செயலர்)



ஆர். டேவிட் தமிழ்ச்செல்வன், I B.A.

Scanned with CamScanner

# பாரதி கதைகள்

பெ தேவராஜ்
II பி. காம்,

''பொடியினுல் அலங்கரிக்கப்பட்ட மூக்கு, வெற்றிலைக் காவியினுலும் புகையிலை சாற்றினுலும் அலங்கரிக்கப்பட்ட பற்கள், குற்றுயிரோடு கிடக்கும் உதடு, ஆபரணங்கள் பொருந்திய செவிகள், பூதாகரமான உடல், பிள்ளையார் வயிறு, ஒருவிதமான இருமல், அரையில் பட்டு ஜரிகை வேஷ்டி, விரல் நிறைய மோதிரங்கள்''. இதுதான் ராமசாமி கவுண்டர்.

உணர்ச்சிப் பிழம்பாகச் சிறுமை கண்டு பொருகும் கவிஞர் ஒருவர் எழுத்திலே இயல்பான நகைச்சுவை குதிபோட்டு வருவது என்பது சாதாரணமானதா? தாகூரைப் பற்றி சொல்வதுண்டு. கவிஞர் என்ற பெரும் புகழின் முன்னே அவர் ஒரு சிறந்த நாவலாசிரியர், கதாசிரியர், கட்டுரையாளர் என்பதெல்லாம் கரைந்து மறைந்துபோய் விடுகிறது என்று; அது நம் மகா கவிக்கும் பொருந்தும்.

மேலே குறித்த கவுண்டர் வர்ணனையும், பாரதியின் முற்றுப் பெருத சின்ன சங்கரன் கதையில் வருவன. வெறும் வர்ணனையும், நகைச்சுவையும் மட்டுமல்ல, ''சஸ்பென்ஸ்'' ''சஸ்பென்ஸ்'' என்று சொல்கிருேமே! ஒரு சஸ்பென்ஸ். இதே சின்ன சங்கரன் ஒரு சஸ்பென்ஸ் வைக்கிருர். இக்கதையும் முற்றுப் பெருமல் கேள்விக்குறியாக வைக்கிருர். பாரதி எழுதத் துவங்கிய இன்னெரு நெடுங்கதை ''சந்திரிகையின் கதை'' இந்தக் கதையை படிக்கும் ஒருவருக்கு அமரர் கல்கியின் அமரதாராவும் நினைவில்மின்னுமல் போகாது. ''தர்ம போதனை வியாசங்கள் எழுதுவானேன்''? கதை என்று எடுத்தால் கற்பனை புனைவையே அதில் நான் முக்கியமாக கருதுவேன். எனினும் என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன என்ற பாரதியின் வரிகளுக்கு சந்திரிகையின் கதையும் விலக்கல்ல

இளமையிலேயே மணந்து கணவனையும் உடன் இழந்து அண்ணியின் அரைக்குழந்தையை வளர்க்கும் பொறுப்போடு ஜி. சுப்ரமண்ய ஐயர், வீரேசலிங்கம், பந்துலு ஆகியோரைச் சந்தித்து உதவி பெறுகிருள். அவளுக்கு பல துன்பங்கள் நேரிடினும் அதிர்ஷ்டம் பாலயோகி வடிவில் அவளை அணைக்கிறது துறவைதுறந்து துணிச்சலாக விசுவநாத சர்மாவாகி விசாலாட்சியை கைபிடிக்கிருர். இல்லறம் இன்பமயமாகிறது. எல்லாம் ஒன்றரை வருடம்தான் விசுவநாதனுக்கு பைத்தியம் பிடித்து விடுகிறது. விசாலாட்சி தைரியத்தை இழக்கவில்லை. கதையும் முற்றுப் பெறவில்லை.

பாரதியின் தேசிய உணர்வுப் பின்னணியில் இன்னொரு கதை. ராவ்பகதூர் தம் மகள் மீனாவை முறை மகனுக்கு மணம் முடிக்க தயக்கம் காரணம் அவன் விடுதலை உணர்வு மிக்கவன். தேச பக்தனுக்கு காதலா? வேறொருவன் மணக்கும்படி விடவும் விரும்பவில்லை. அவன் மனப் போராட்டம் எத்தனை பேர் மனப் போராட்டம் அன்று? "அடா நல்லதுவடா உன் துறவு நல்ல பக்தியடா உன் பக்தி. நல்ல தர்மம் நல்ல சிரத்தை" "ச்சீ நாய் மனமே! அம்ருத வெள்ளத்தைவிட்டு வெறும் எலும்பைத் தேடி போகிறாயா? காதலியின் 'தற்கொலை செய்து கொள்ளப் போவதான' கடிதம் அவனை உலுக்கி விடுகிறது. தேச பக்தர் லாலா லஜபதியின் தொண்டன் அவன். காதலைப் போற்றும் கவிஞராயிற்றே பாரதி. காதலர்கள் மீண்டும் காசியில் சந்திக்க வைக்கிறார். மேலே குறித்த கதைகள் கவிஞரின் நாட்டுப் பற்று சீர்திருத்த நோக்கம் மட்டுமல்ல கவிதைப் பொறிகளும் சுடர்விடும்.

பாரதியின் குட்டிக் கதைகள்கூடத் தனித்தன்மை வாய்ந்தவை. அமெரிக்கா போன சீன ராஜகுமாரன்' கதையில் பிரபுவின் மனைவி கேட்கிறாள் "உங்க தேசத்தில் கல்யாணம் ஆகும் வரை மணப்பெண் தன் புருஷன் முகத்தைப் பார்ப்பது வழக்கமில்லையாமே"! அதற்கு ராஜ குமாரன் "உங்கள் தேசத்தில் சில பெண்கள் கல்யாணமான பிறகு தனது புருஷன் முகத்தை பார்ப்பதில்லையாமே" என்று பதிலடி கொடுக்கிறான். இவ்வளவு தான்! இதில் தான் எவ்வளவு அழுத்தமான நையாண்டி! இன்னொரு குட்டிக் கதை. கொல்லன் ஒருவன் கவிராயர் பாட்டை மனம்போனபடி பாடிக்கொண்டிருக்கிறான். கவிராயர் உலைக்களத்துச் புகுந்து அங்கிருந்த பொருளை யெல்லாம் தாறுமாருக வாரி இறைக்கிறார். ஏன்? என்று கேட்டதற்கு "நீ என் பாட்டை தாறுமாருகப்பாடி கொலை செய்யலாமா?" என்று கூறினார் கவிராயர்.

சாமியார் வேடம் போட்டு போலித் துறவிகள் மக்களின் மூட நம்பிக்கைகளை மூலதனமாக்கி ஏமாற்றிப்பணம் சம்பாதிக்கும் போக்கை "கிளிக்கதையில் அம்பலப் படுத்துகிறார்; பாரதி.

பாரதியின் புதியபார்வைக்கு புராண இதிகாசங்களும் இடம் தருகின்றன. ராமாயணம் பாரதியின் நகைச்சுவை உணர்வில் கீமாயாணமாகி "குதிரைக் கொம்பு" என்ற கதையாக முளைக்கிறது. பாரதி வக்ரமுகசாஸ்திரியாகி கதைக்கிறார். அரசு வேண்டி போர்க் கொடி உயர்த்தும் ராமன் நாடு கடத்தும் தசரதன் - பலாத்காரமாகச் சீதையைக் கவர்ந்து மணக்கும் ராமன் - சீதைக்கு இரங்கி மிதிலைக்கு திருப்பி அனுப்ப உதவும் சூர்ப்பநகை - அவளிடம் காதுகளையும் கால் கட்டை விரல்களைவும் இழக்கும் இலக்குவன் இப்படி ராமாயணப் பாத்திரங்கள் தாறுமாருக

பாரதியிடம் அகப்பட்டு ராமாயணம் ...ராயணமாகி நகைச்சுவை விருந்தளிக்கிறது.

பாரதி நவதந்திரக் கதைகள் என்று பஞ்சதந்திரக் கதைப்பாணியில் கதைக்குள் கதையாய் சொல்லிக்கொண்டு போவதைப் பார்த்தால் ''பாரதிக்கு கைவராத கலேயே இல்லை'' என்பது நன்றாகப் புரியும்.

பாரதியார் கவிதைகளே எழுதாமலிருந்தால்கூட, அவருடைய உரை நடைகளால் மட்டுமேகூட, தமிழ்மொழி வளர்ச்சியில் தனியானதொரு இடத்தை வகித்திருப்பார். அவருடைய கதைகள் பலதிறப்பட்டவை. பல நோக்குடையவை. சிறு கதை நவீன வளர்ச்சியிலும் பாரதிக்கு தனியானதொரு இடம் நிரந்தரமாக உண்டு என்பதை எவரும் மறுக்கவோ! மறைக்கவோ! முடியாது.

---

# விடுகதை

வா. இராசகோபால்
II பி. காம்

1 ஊர் உண்டு மக்கள் இல்லை; மலையுண்டு மரங்களில்லை: ஆறுண்டு நீரில்லை: வழி உண்டு வாகனமில்லை; வண்ண முண்டு உயிரே இல்லை.
அது என்ன? (தேசப்படம்)

2 வாயில்லை புத்திமதிகள் சொல்வான்; காலில்லை கடல் கடந்தும் செல்வான்; கையில்லை; உளங்காட்டிக் கொள்வான்; உயிரில்லை ஒருநாளும் சாகமாட்டான்.
அவன் யார்? (புத்தகம்)

3 அதிசயக் குளத்திலே அற்புதக்குருவி வாலினால் தண்ணீர் வற்றவற்றக் குடிக்குது.
அது என்ன? (விளக்கு)

4 மூன்றுகால் உள்ளது, முக்காலி அல்ல: முறுக்குப்போன்றது, தின்பண்டமும் அல்ல; முதுகிலே விழுவது அடியும் அல்ல
அது என்ன? (பின்னல்)

5 பாதாளத்திலிருந்து வந்தவர்; பம்பரம்போல் சுழன்றவர்; எரியும் தீயில் வெந்தவர்: எல்லோர் வீட்டிலும் நுழைபவர்.
அவர் யார்? (பானை)

6 பல் இல்லா வெள்ளையன், காட்டிலே மேட்டிலே வாய்விட்டுச் சிரிக்கிறன்.
அவன் யார்? (பருத்தி)

7 தாய் இனிப்பாள்; தந்தை புளிப்பார்; மகள் மணப்பாள்.
அவர்கள் யார்? (பால், தயிர். நெய்)

8 கண்டு பூப்பூக்கும்; காணுமல் காய்காய்க்கும்.
அது என்ன? (கடலை)

9 வண்டு முகராத பூ; கொண்டையிலே ஏருத பூ
அது என்ன பூ? (உப்பு)

10 பார்க்கப் பச்சை; பழுத்தால் சிவப்பு; பல்லிலே பட்டால் கண்ணிலே நீர்.
அது என்ன? (மிளகாய்)

# வாழ்க்கை என்பது ஒரு ஓடமே!

எஸ் சுந்தரராஜன்
I பி. காம்

வானமெல்லாம் கருமேகம்; ஊரெல்லாம் கனமழை. பாதையெல்லாம் பெரு வெள்ளம். இன்று மாலை முதல் நாளை மாலை வரை புயல் என்று வானிலை ஆராய்ச்சியினர் அறிவித்த காரணத்தினால் பள்ளிகளெல்லாம் விடுமுறை. இப்படி ஒரு இனிப்பான செய்தியைக் கேட்ட பள்ளிச் சிறுவர், சிறுமியர்களின் உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சிப் பெருக்கால் அவர்கள் துள்ளிவிளையாடும் புள்ளிமான்களைப் போல விளையாடிக்கொண்டிருந்தனர்.

சிறுவர்கள் தங்களது பாடப்புத்தகங்களைக் கிழித்து ஓடம் செய்து தெருவில் ஓடுகின்ற நீரில் ஓடவிட்டு மகிழ்ந்தனர். அச்சிறுவர்களைப்போல விஜயாவும் தன்னுடைய பாடப்புத்தகங்களைக் கிழித்து ஓடம் செய்து விடுகிறாள். விஜயாவின் அம்மாள் ஜானகி அம்மாள் அவளைக் கண்டிக்கிறார். ஏண்டி விஜயா மழையிலே நனையாதே என்றால் கேட்கமாட்டே! போடி உள்ளே! என்றார் ஜானகி அம்மாள்.

மழலைச் செல்வம் விஜயா போக மறுக்கிறாள் அழகிய ஓடம் ஒன்று செய்து நீரில் ஓடவிடுகிறாள். அது சிறிது தூரம் சென்று அவள் வாழ்க்கையை முன்னறிவிப்பதுபோல கவிழ்ந்துவிட்டது. இதனை அறியாத விஜயா மற்றும் மூன்று படகுகளைச் செய்து நீரில் விட்டாள்; அதில் ஒன்றுமட்டுமே நீரில் மூழ்காமல் கரை சேர்ந்தது. அதைப்பார்த்த விஜயா பெருமகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கினாள்.

அன்று பெய்த மழையினால் அணைக்கட்டில் நீரின் மட்டம் உயர்ந்துகொண்டிருந்தது. மேலும் அணைக்கட்டு ஊரைவிட்டு வெகுதூரம் இருப்பதால் உடைந்தாலும் நாம் பாதிக்கப்பட மாட்டோம் என்று ஊராரும், விஜயாவும், அவள் தோழிகளும் மிகமகிழ்ச்சியாக இருந்தனர்.

ஆனால், இயற்கை அன்னையின் சீற்றத்தை யாரறிவார், இயற்கை அன்னை சற்றும் இரக்கமில்லாமல் அணையை உடைத்து ஊருக்குள் சீறி ஓடிவந்தாள். இதனை அறியாத மக்கள் மழையில் நனையாதபடி வீட்டைப் பூட்டிக்கொண்டிருந்தனர். ஓடிவரும் இயற்கை அன்னை ஒவ்வொரு வீட்டிற்கும் அழையா விருந்தாளியாக வீட்டுக்குள் நுழைந்தாள். மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் பெரிய வீடுகளை நோக்கி ஓடினர். அப்படிப்பட்ட பெரிய வீடுகளும் தரை

...ட்டமாயின என்றால் குடிசைகளின் நிலையினைச் சொல்லவும் வேண்டுமா?

இந்நிலையில், விஜயாவைக் கையிலும், அவள் தம்பி ரவியைத் தோளிலும் அமர்வித்து அப்பா மூக்கையா முன் ஓட ஜானகியம்மாள் பின் ஓட ஒரு மேடான பகுதியை அடைந்தனர். இடைவிடாத மழையினால் வெள்ளம் பெருக்குற்று அம்மேட்டுப் பகுதியில் உள்ளவர்களையும் சுருட்டிக்கொண்டு ஓடியது. அதில் விஜயா ஒரு மரக்கிளையை இருகப் பற்றிக் கொண்டு இரவுப் பொழுதைக் கழித்தாள்.

மறுநாள் காலை, சில வெள்ள நிவாரண மீட்புப் பணிக்கு வந்தவர்கள் அவளை மீட்டனர். மழையில் நனைந்ததால் விஜயாவின் கால்களும், கைகளும் சோர்வுற்று மயங்கிய நிலையில் இருந்தாள். அவளுக்கும் மற்றவர்களுக்கும் உடனே சிகிச்சை அளிக்கப்பட்டது. குடும்பங்கள் எல்லாம் சிதறுண்டு பிரிக்கப்பட்டன. சில உயிர்கள் காக்கப்பட்டன. பல பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கண் விழித்த விஜயா தம் பெற்றோர்களை இழந்து அனாதை ஆனதை உணர்ந்தாள்.

விஜயாவை, அவள் உறவினரான ஒரு கிழவர் வளர்த்தார். அவளிடம் உன் அம்மா, அப்பாவை எங்கே என்று கேட்டால் 'வெள்ளம் கொண்டுபோச்சு' என தம் மழலை மொழியில் கூறுகிறாள். உடுக்க உடையின்றி, உண்ண உணவு இன்றி தவிக்கும் மக்களுக்கு உதவ அரசு நடவடிக்கை எடுத்தது. அதனால் அம்மக்கள் ஓரளவு மகிழ்வுற்றார்கள்.

விஜயா தம் தோழிகளையும், பெற்றோர்களையும் இழந்த நிலையில், நான் இப்போது மழையில் நனைவது இல்லை! ஏனென்றால் நனைந்தால் திட்டுவதற்கு அம்மா இல்லை. தவறும் செய்யமாட்டேன்! ஏனெனில் திருத்துவதற்கு அப்பாவும் இல்லை. அதனால் நானே திருந்தி விட்டேன். ஆனால் நான் சிறு ஓடம் விட்டபோது அதனை மூழ்கடித்தது வெள்ளம், அதுபோல இப்போது என் வாழ்க்கை பெற்றோர் என்ற ஓடமின்றித் தவிக்கிறது.

'மழையில் நனைந்தாலோ! அல்லது விளையாடினாலோ அப்புறம் கிடைக்கும் அடி' என்று அம்மா சொன்னார்கள். அது தான் என் இறுதி விளையாட்டாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். இனிமேல் நான் விளையாட்டுப்பிள்ளை அல்ல; என்னை வளர்க்கும் என் தாத்தாவுக்கு உதவியாய் இருப்பேன். முடிந்தால் நான் பெரியவளானதும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வேன், என்று கூறினாள். துன்பம் என்பது வெள்ளத்தினால்தான் வரும் என்பது அப்பிஞ்சு உள்ளத்தின் எண்ணம் போலும்!

வாழ்க்கை என்று சொல்லப்படுகின்ற ஓடம் இப்பரந்த உலகமாகிய கடலிலும், அதற்கிடையில் எழுகின்ற அலையிலும் சிக்குண்டு எப்படி கரைசேரப்போகுமோ? ஒரு துன்பத்தில் சிக்கித் தவித்துவிட்டால் அத்துன்பமானது எப்படிப்பட்ட மனிதனையும் மாற்றி விடும் என்பது இச்சிறுமியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து தெரிகிறதல்லவா?

இந்த நிகழ்ச்சியின்மூலம் வாழ்க்கை என்ற ஓடத்தில் ஏறி, அனைவரும் கரை சேர முடியும் என்பது என்ன திண்ணம்! எனவே வாழ்க்கை என்பதும் ஒரு ஓடமே! ★

Scanned with CamScanner

# "குடி ஒழியக் குடி உயரும்"

சு. ரா. கணேசன்
I பி. காம்

இறுகி விட்ட திரண்ட உடலைக் கொண்டிருந்த முனியன் நெஞ்சை நிமிர்த்தி பஜாரின் பிளாட்பாரத் திண்டு ஒன்றில் உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் அவ்வழியாக வருகின்ற வாகனங்களின்மேல் இருந்தது. வேகமாக வந்த லாரி ஒன்று ஒரு கடையின் முன்பு வந்து உறுமிக்கொண்டு நின்றது. அவ்வளவுதான், ஒரே பாய்ச்சலில் ஓடி வந்து லாரியின்மேல் தாவினான் முனியன் லோடு இறக்குவதற்கு வேறு லோடு மேன்கள் இல்லை. லாரியில் கிடந்த பத்து பதினைந்து மூடைகளையும் முனியனே இறக்கும் வாய்ப்பு. ஒரே மூச்சில் எல்லா மூடைகளையும் கடையில் சேர்த்தான். இடுப்பில் கட்டியிருந்த குற்றாலத் துண்டை உதறி ஆறாய் ஓடிய வியர்வையைத் துடைத்துக்கொண்டான், சுமைக் கூலியாக, கடை முதலாளி கொடுத்த இரண்டு ரூபாயைப் பெற்றுக்கொண்ட முனியன் பஜாருக்கு வந்தான். இதுதான் கடைசி லோடு, இரவு ஒன்பது மணிக்கு மேலாகிறது. நேரமாகிவிட்டது புறப்படத் தயாரானான் முனியன்.

முனியனின் வீட்டில் அழுது ஓய்ந்த முனியனின் குழந்தைகள் பசிவலை முகங்களில் பின்னியிருக்க அமைதியாய் உறங்கின. காலையில் சாப்பிடாமல் பள்ளிக்குச் சென்று, அங்கு வண்டுகள் படையெடுக்கும் உப்புமாவை அரைவயிறு சாப்பிட்டு விட்டு, வீடு சேர்ந்த குழந்தைகளுக்கு இரவில்கூட முனியனின் மனைவி முத்தம்மாவினால் சோறு போட முடியவில்லை. பசியால் துடிதுடித்துவிட்டு, ஓய்ந்து அமைதியாய் உறங்கும் குழந்தைகளின் அன்பு முகத்தைக்கண்ட முத்தம்மாவினால் அழாமல் இருக்கமுடியவில்லை. குழந்தைகளைப் பார்த்தவாறு அங்கலாய்த்துக் கிடந்தாள் முத்தம்மாள். இந்நிலை முனியனின் வீட்டில் ஓய்ந்தபாடில்லை. ஓய்வதற்கு முனியன் மனது வைத்தால் தானே?

காளை என்ற நண்பனை அழைத்துக் கொண்டான் முனியன். காளைக்கு இன்று முனியனின் சப்ளை. இருவரும் சாராயக் கடையை நோக்கி வேகமாய் நடந்தனர். போகும் வேகத்தில் பஜாரில் நின்ற சில சைக்கிள்களையும், ஆட்களையும் இடித்துக் கொண்டு சட்டைசெய்யாமல் போயினர் சாராயக் கடையின் திரையை விலக்கி உள்ளே நுழைந்தனர். ஆளுக்கு ஐநூறு மில்லி ஊற்றும்படி முனியன் ஆர்டர்

போட்டான். இருவரும் குடித்தனர். குடித்துவிட்ட முனியன் சாக்குக்கு உண்டான பத்து ரூபாயை மடிச் சுருக்கிலிருந்து எடுத்தான். அதோடு கூடவே ஒத்த ரூபாய் ஒன்று கீழே விழுந்தது. ஆட்டபோதையில் இருந்த முனியன் பணம் தவறியதைக் கவனிக்கவில்லை. அதைப்பார்ப்பவர்களுக்கு குட்லக்(Good Luck) பத்து ரூபாய் நோட்டைக் கடைக்காரிடம் கொடுத்த முனியன் காளியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான் தெருவழியாக சிறிது தூரம் சென்றதும் போதை உச்சகட்டத்தை எட்டியது. இருவரும் தள்ளாடிக் கொண்டே சென்றனர். இடையிடையே ஏதோ முனங்கல் வேறு! நள்ளிரவு ஆகிவிட்டதால் இவர்களை வேடிக்கை பார்ப்பதற்கு ஆட்கள் இல்லை. முனியன்னே! நான்...வூட்டுக்குப்...போறேன் என்றான், முனியன் தெருவிற்கு பக்கத்துத் தெருவில் நுழைந்தான். முனியனும் தன் தெருவில் நுழைந்து தன் வீட்டின் கதவில்போய் 'தொப்' பென்று சாய்ந்தான். 'ஏட்டி முத்தம்மா...கதவைத் திறடி' முனியனின் இந்தக் குரல் சோகமே உருவாய் அங்கலாய்த்துக்கிடந்த முத்தம்மாவிற்குமட்டுமின்றி அந்தத் தெரு முழுவதும் கேட்டது. ஓடிவந்து கதவைத் திறந்த முத்தம்மாள் தனது கணவனை கைத்தாங்கலாகப் பிடித்து வந்து கட்டைக்கட்டிலில்போட்டாள் முனங்கிக் கொண்டிருந்த முனியன் குறட்டைவிட ஆரம்பித்தான். தேம்பித் தேம்பி அழுத முத்தம்மாள் தன் தலையை கட்டிலில் சாய்த்துக்கொண்டு உறங்காமல் உறங்கினாள்.

பொழுது விடிந்தது பெருங்குடல் சிறுகுடலை விழுங்க எத்தணிப்பதை உணர்ந்த குழந்தைகள் அதிகாலையில் எழுந்துகொண்டன. குழந்தைகளுடன் அழுகுரல் முழங்கிற்று. முத்தம்மா வேறு ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டாள். முனியனுக்கோ தலை வெடித்துவிடும் போலிருந்தது. அக்கம் பக்கத்தினர் கூடிவிட்டனர். அடப்பாவமே!...பக்கத்துத் தெருவிலே என்னடான்னு காளினனு ஒருத்தர் குடிச்சிட்டு வந்து மாடப்பன் கிணத்திலே விழுந்து இப்பந்தான் தூக்கியிருக்காங்க தன்னைச் சுற்றி கூடியிந்தவர்கள் பேசிய இவ்வார்த்தைகளை மட்டும் முனியன் சீரியஸாகக் கேட்டான். அவன் மனதிலே ஒரு சேன்ஜ்(Change)தன்னையும் தன் குடும்பத்தையும் கெடுத்த குடி, தன் பணத்தால் குடித்த நண்பனின் உயிரையே குடித்ததை எண்ணியோ என்னவோ முனியன் நிரந்தரமாகத் தெளிவுபெற்றான். அன்று முதல் தானுண்டு தன் வேலையுண்டு என்றாகி விட்டான். லோடுமேன் முனியனின் குடிச்சுமை இறங்கி குடும்பச் சுமை ஏறியது. தன் கணவனின் இந்த திடீர் மாற்றத்தைக் கண்ட முத்தம்மாவிற்கு வியப்பிலும் வியப்பு. மகிழ்ச்சியால் பொங்கிப் பூரிப்படைந்தாள்.

# பெரியார் ஒரு களஞ்சியம்

எ. ராமகிருஷ்ணன்
II பி. காம்

விசித்திர வைதீகர்களை விழி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ்; உலகுணராதவர்களுக்கு உலகம் உருண்டை என்று உரைத்து உதைபட்டான் கலிலியோ. வைதீகரின் மடமையை வாட்டினார் வால்டேர். மக்கள் மன்றத்துக்கு மதிப்புத் தரவேண்டும் என்றார் ரூஸோ. வேதப் புத்தகத்தை விற்று விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தார் விக்ளிப், ஜ்விங்லி, மார்ட்டின் லூதர் போன்றோர்; அடிமைகளை விடுவித்தார் அபிரகாம் லிங்கன். முதலாளியின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல் மார்க்ஸ், அவர்களுக்காகப் போராடினார் லெனின். சீனரின் சிறுமதியைப் போக்கினார் சன்-யாட்-சன். துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால். இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்கச் செய்தார் இங்கர்சால். பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்ஷா, இவ்வறிஞர்களுக்கு மத்தியிலே தமிழகமும் தலைநிமிர்ந்து நிற்கத்தானோ என்னவோ? தமிழ் காக்கும் தலைமகன், கொள்கைக் குன்று, சொல்லேருழவன், பகுத்தறிவும் பகலவன், சிந்தனைச் சிற்பி, சீர்திருத்தச் செம்மல், வெண்தாடி வேந்தர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்படும் தமிழனை, ஈ. வெ இராமசாமிப் பெரியாரை ஈன்றெடுத்தாள் தமிழ்த்தாய்.

ஆம்; நகைச் சுவைப் பேச்சு, முதிர்ந்த அனுபவம், உயர்ந்த பண்பாடு, உறுதியான கொள்கை, சிந்திக்கத்தக்க சீர்திருத்தக் கருத்துகள், பட்டவர்த்தனமான பகுத்தறிவு விளக்கம் இவற்றின் உருவம்தான் தந்தை பெரியார்.

ஒருவர் தன்னந்தனியராய்ப் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்றவர் அய்யா ஒருவர்தான் என்று இட்டவட்டமாகக் கூறமுடியும்.

சாதி ஒழிப்பு, ஆண்டான் அடிமை மேல்ஜாதி, கீழ்ஜாதி, பெண்ணடிமை போன்றவற்றை ஒழித்தல், பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்புதல், தீண்டாமை ஒழித்தல், குழந்தை மணம் நீக்குதல், விதவைத் திருமணம், கலப்புத் திருமணம் போன்றவற்றைச் செய்து வைத்தல், தமிழ் மொழி வளர்த்தல்,

Scanned with CamScanner

# தபால்தலைகள் சேர்த்தல் - ஒரு கண்ணோட்டம்

எம். ஜி. ராமசுப்பிரமணியன்,
III பி. காம்,

அஞ்சல்தலை சேர்ப்ப தென்பதை, அஞ்சல்-தலைகளைப் பற்றி விஞ்ஞான ரீதியாக அறிந்துகொள்வது எனலாம் இச் சிறிய துண்டுக் காகிதங்களில் அப்படி என்ன முக்கியத்துவம் உள்ளது? என நாம் நினைக்கலாம். இயந்திரமாகிவிட்ட மனிதவாழ்வில் தபால்தலை சேகரிப்பு, ஒரு தனி கலையை (களை) ஏற்படுத்தும் என்பதை அறிந்து கொண்டால், நமக்கு அதன் முக்கியத்துவம் புலப்படும்.

அஞ்சல்தலைகள் சேர்க்கும் பழக்கத்தால், நாம் நம் நாட்டைப்பற்றி மட்டுமல்ல, பல்வேறு, நாட்டினரின், பழக்க வழக்கங்கள், கலை, வரலாறு, புவியியல் அமைப்பு, தாவரங்கள், விலங்குகள் கட்டிட அமைப்புகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

அஞ்சல்தலை சேகரிப்பது என்பது, வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, நமக்கு மிக்க பயன் தரும் ஒரு நண்பனாகத் திகழ்கிறது இது. அறிவைவளர்ப்பதோடு நில்லாமல், பல்வேறு, நாட்டு மக்களிடையே, சகோதரத்துவத்தையும், ஏற்படுத்துகிறது. இதன் சிறப்பு, பயன், பலன், முக்கியத்துவம் பற்றி நன்கு அறிந்துகொண்டு, பல நாட்டினர், தங்கள் பள்ளிகளில், தபால்தலைகள் சேகரிக்கும் கலையை ஒரு, பாடமாக, வைத்துள்ளனர்.

தபால்தலைகள், நமது வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அது நமது கடின உழைப்பு, இயந்திரமயமான வாழ்க்கை, இவற்றால் ஏற்படும், சோர்வை நீக்கி, புதுத்தெம்பையும், புத்துணர்ச்சியையும், அளிக்கும் ஓர் அதிவேக நிவாரணம் அளிக்கும் அரு மருந்தாகும். திரு எஸ். டாஸ்டர் என்பவர், தமது தபால் தலை பற்றிய, படைப்புக்களில், ஒன்றில் ''ஜனாதிபதி, ரூஸ்வெல்ட், இரண்டாம், உலக யுத்தத்தின்போது, தான் எங்கு சென்றாலும், சில தபால்தலைகளை தன்னுடன், எடுத்துச் செல்வாராம். ஏனெனில், தனது ஓய்வு நேரத்தில் அதைப் பார்க்கும்போது அவரது சோர்வு, தளர்ச்சி ஆகியவை நீங்கி, மனம் ஒரு நிலை அடையுமாம்.'' என குறிப்பிட்டுள்ளது. ஈண்டு நோக்கத்தக்கது.

அதிகமாகிவரும் பண வீக்கத்தால், பல நாட்டினர், தங்கள் நாட்டின், காகிதப் பணத்தின் மீதான நம்பிக்கையை

இழந்து வருகிறார்கள். ஆகவே, அஞ்சல் தலை சேகரிப்பு ஒரு பயனுள்ள முதலீடாக இருக்கிறது தபால் தலை எடையில் குறைந்தது மதிப்பில் உயர்ந்தது. சூதாட்டம், மற்ற பொழுது போக்குகளில் செலவிடும் பணத்தை .இதில் செல-விடுவது மிகவும் நல்லது பத்து ரூபாய் மதிப்புள்ள 'காந்தி தபால் தலை' இப்-பொழுது நூறு ரூபாய்க்கும் அதிக மதிப்-புள்ளதாகக் கருதப்படுகிறது.

எனவே, தபால் தலை சேகரிப்பது என்பது, லாபத்தையும், மகிழ்ச்சியையும், விரும்புபவரால், கைக்கொள்ளப்படும், நல்ல பொழுது போக்காகும்.

*With best compliments from*

**SRI TIRUPATHI & CO.,**

Cotton & Chillies Commission Merchants.

Cotton Market, Tenkasi Road,

RAJAPALAYAM.

Phone: 2865

Scanned with CamScanner

எழுத்துச் சீர்திருத்தம் கொணர்தல் இவற்றை அடிப்படையாகக் கொண்டு தனது பணியைத் தொடர்ந்தார் தந்தை பெரியார் பலமுறை வெற்றியும் கண்டார். இவையே இன்று வித்தாகி செடியாகிவிட்டது. அதை நாம் மரமாக வளர்த்து பலன் காணவேண்டியது நமது கடமையுமாகும்.

அய்யா அவர்கள் ஒன்றும் பல்கலைக் கழகங்களில் பட்டங்கள் பெற்றவர் அல்ல. ஆனால் பகுத்தறிவுவாதி. இன்று அவர் ஆற்றியிருக்கும் தொண்டுகள், போக்கியிருக்கும் பேதங்கள், எழுதியிருக்கும் நூல்கள் ஒவ்வொன்றும் கருத்துப் பேழை; கற்பூரப் பெட்டகம்.

சுதந்திரப் போராட்டத்திற்கு சிறை; பொன்மொழி என்ற நூல் எழுதியதற்குச் சிறை. இப்படிப் பல முறை சிறை சென்ற அய்யா கூறுவார் 'சிறை என்னைச் சிதைத்து விடாது. சிறையே எனக்குச் சிங்காரமாளிகை'

அய்யாவின் மேடைப் பேச்சில் தென்றலடிக்காது; புயல் வீசும். ஆம்; நோய் தீர்க்க அவர் கசப்பான மருந்தையே தந்தார் மக்களுக்கு மூட நம்பிக்கைகளை நீக்க அவர் பலமுறை கடினமாக நடந்துகொண்டதுண்டு.

திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்லுகிறாரே! என்று பலர் ஏசினர்; பேசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர். ஆனால் அவர் பேச்சைக் கேட்ட பண்ணையிருந்தனர். மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும்,

இன்றோ எதிர்த்தவர்கள் ஏளனம் புரிந்தவர்கள் ஏனோதானோ என்றிருந்தவர்கள் தங்களது நிலை தன்னாலே மாறிவிடக் கண்டார்கள். கொதித்தவர்கள் அடங்கினார்கள். மிரட்டியவர்கள் பணிந்தார்கள், அலட்சியம் செய்தவர்கள் அக்கரை காட்டினார்கள்.

இருநூற்றாண்டுகளில் செய்துமுடிக்க வேண்டியதை இருபேத ஆண்டுகளில் செய்து முடித்த ஆற்றல் அய்யாவைச் சாரும் இந்த மாற்றத்திற்காக அவர் விழித்த இரவுகள் பல, தாங்கிய இன்னல்கள் பல பல,

நாகரீக உலகமாம். அங்கு உயர் வகுப்பார் வாழும் தெருவில் நடப்பதே பாபம். நிழல் பட்டால் தீட்டு, மலத்தை மிதித்துவிட்டால் காலைமட்டும் கழுவும் உயர் வகுப்பான் மனிதனைத் (கீழ்ஜாதி) தீண்டினால் குளிக்கவேண்டுமாம். இதை எதிர்ப்பவன் நாத்திகனாம்,

ஊரை ஏய்க்க உத்திராட்சமா? கண்டவரை மயக்க காவியமா? விபூதி பூசிக்கொண்டு விபரீதச் செயல்கள் செய்வதா? என்று பக்தியைப் பகல் வேசமாக்கியவர்களைப் பார்த்துக் கேட்டால் அவன் பாமரனாம்; பாவியாம்.

பகுத்தறிவு வாதம் என்பது, அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறப்பதாகாது. எதையும் காரணங் கண்டு, ஆராய்ந்து உண்மை காண்பதேயாம். போலித்தனமான செயல்களை அழிப்பதே பகுத்தறிவு.

சிந்தனை என்ற வயலுக்கு ஆராய்ச்சி என்ற நீர் பாய்ச்சி, பகுத்தறிவுப் பரம் படித்து உயர்வு தாழ்வு என்ற மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி மூடமதி என்ற களைகளை முற்றிலும் அகற்றும் விவேகம் அய்யா அவர்களுக்கு இருந்தது. எனவே தன் கொள்கைகளை நிறைவேற்ற முயன்றார் வென்றார். அறிவுப் புரட்சியின் முதற் கட்ட வெற்றி இது. இந்த வெற்றி கிட்ட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது அவர் இதுவரை ஆற்றியிருக்கிற தொண்டுக்கு-அவரால் தமிழகம் பெற்றிருக்கும் வளர்ச்சிக்கு நாம் நமது மரியாதையை, அன்பை, இதயத்தைக் காணிக்கையாக்குவோம்.

சிலருக்கு வெள்ளை உடை - கருப்பு மனம். தந்தை பெரியாருக்கோ கருப்பு உடை-வெள்ளை மனம்.

பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி எளிதில் நிற்கப் போவதில்லை. அது போகவேண்டிய தூரத்திற்கு போய் அடைய வேண்டிய சக்தியை - இலக்கைத் தொட்டபின் தான் நிற்கும்.

நீதி நின்று வெல்லும், ஆனால் நிச்சயம் வெல்லும.


WITH
BEST
COMPLIMENTS
FROM

Phone: 2944

S. S. Ramasubramania Raja & Co

Cotton Merchants
RAJAPALAYAM-626117.
*S. INDIA*

# இரத்த தானம்

சு. ரா. கணேசன்
I பி. காம்

வாழ்வே மாயமா ?.........வாழ்வே மாயமா......பெருங்கதையா?.. கடும்புயலா... வானொலியின் இந்தப்பாடல் ராதிகாவின் வீடு முழுவதும் எதிரொலித்தது. இப்பாடலைத் தன் துன்ப கீதமாக ஏற்றுக்கொண்ட ராதிகா, கழுத்துவரை வந்த துக்கத்தை அடக்கமுடியாமல் பீறிட்டு அழுதுவிட்டாள். ராதி.........என்னம்மா? விடிஞ்சா கல்யாணம், கண்ணீரும், கம்பலையுமா?......தூங்கும்மா......தன் தந்தையின் ஆறுதல் வார்த்தைகளை நஞ்சாய் ஜீரணித்த ராதிகா சோகமாக கட்டிலில் வீழ்ந்தாள். இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. வீட்டில் வேலையாட்கள் மட்டும் அங்குமிங்குமாக கல்யாண தோரணங்களை கட்டிக் கொண்டிருந்தனர். ராதிகாவின் படுக்கையறையில் ஒரே அமைதி. சுவர்க்கடிகாரத்தின் ஓசை மட்டும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தது. நாளை மணப்பெண்ணாய்த் திகழ வேண்டிய ராதிகா, வெறுப்பாய் ஏமாற்றமாய், சோகமாய் கிடக்கிறாளே ஏன்?

ரமேஸ். ஆம், ராதிகாவின் செலக்ஷன். புக் எக்சேன்ஜிலே பாய் பிரண்டாகி பின்னர் காதலர்களாக மாற்றம். ரமேஸிடமும் அன்பும், அடக்கமும் இருந்தது ஆனால் ஆரவாரம் இல்லை. பண்பு இருந்தது ஆனால் படோடோபம் இல்லை. அவனுடைய இயற்கை அழகுக்கு முன்னால் பேரலல் பெல்ஸ்களும், ஸ்டெப் கட்டிங்குகளும் பஞ்சாய்ப் பறந்தன. ராதிகாவின் அலாதியான வலைவிரிப்பில்மட்டுமே ரமேஸ் சிக்கினான். அவனைக் கொத்திச் செல்லத் திட்டமிட்ட பல மாணவிகள் தோற்றுப்போயினர்.

ரமேசும் ராதிகாவும் ஒருவரைஒருவர் புரிந்துகொண்டு கண்ணியக்காதல் மயம் பூண்டனர். வண்டும் மலருமாய். மலையும் கொடியுமாய் வானும், நிலவுமாய் பூங்காக்களிலும், கடற்கரையிலும் பரவிவந்தனர். காதல் கீதம் பாடினர். காலக்கனிவிலே தாய் தந்தையரை அணுகி மணம் முடிப்பதென முடிவுசெய்து களிப்புற்றனர். ஆனால் ஒருநாள்! ராதிகாவின் அன்புக் கோட்டை இடிந்து வறண்ட மண்மேடாய் மாறியநாள்! ரமேஸிடம் கொஞ்சிக் குலாவ முயற்சித்து தோற்ற குரலொன்று ராதிகாவின் தந்தை வரதராஜனிடம் பேசியது. சார்... யாரோ...ரமேசுன்னு ஒருத்தன். சுத்த கன்ட்ரிமேன், பேக்வேர்டும்கூட, அவனுடன் உங்க ராதிகா கொஞ்சிக் குலாவுறா. கல்லூரி

இல்லை, இங்கே யாராவது. கொடுத்தாங்கன்னு டெஸ்ட்பண்ணி ரத்தம் கொடுக்கலாம். வரதராஜன் திகைத்தார். தன் இரத்தம் ஏ குரூப்தான் ஆனால் கிழட்டுக்கட்டை அதோடு சுகர் வேறு. வரதராஜன் திருமணத்திற்கு வந்தவர்களைப் பார்த்து ''யாராவது பிளட் டொனேசன் பண்ணிங்கன்னு நல்லா இருப்பீங்க என்று ஆர்வத்துடனும் அன்புடனும் கேட்டார். யாரும் முன்வரவில்லை. விலகிச் சென்று விட்டனர். சிலர் அறியாதது போல் நின்றுவிட்டனர். மாப்பிள்ளையிடம் சென்றார் வரதராஜன். மாப்பிள்ளை நீங்க வாங்க மாப்பிள்ளை என்று கெஞ்சினார். எம் பிள்ளையை இதுக்காகும் வளர்த்தேன்? என்று வெடுக்கென்று மாப்பிள்ளையின் கையை மாப்பிள்ளைவீட்டார் பற்றிச்சென்று ஒதுங்கினர் வாயளவிலே ஒப்பாரிவைத்து செயலளவிலே ஒதுங்கிப் போயினர். ஒவ்வொருவரையும் கடித்துக் கொதறிவிடலாமென்று இருந்தது வரதராஜனுக்கு. கெட்அவுட்'' சீறி விழுந்தார் பணப்பிண்டங்கள் அனைத்தும் ஓடிவிட்டன. விரைந்து வெளியேறினார். எல்லா பிளட் பேங்குகளிலும் அலசினார். ஊஹூம் எங்கும் இல்லை, பைத்தியம் பிடித்தவரைப் போல தன் ஒரே மகளின் பிணத்தையாவது காண்பதற்காக விரைந்து வந்தார். தனது வீட்டில் ரமேஷின் கரங்களிலிருந்து ரத்தம் குழாய்வழியாக ராதிகாவின் உடலில் அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தை கண்ட வரதராஜனின் கண்களில் நன்றிப்பெருக்கால் கண்ணீர் நிரம்பியது.

உடல் தேறிய ராதிகாவை ரமேஷிடம் ஒப்படைத்துவிட்ட வரதராஜன் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாட ஆரம்பித்துவிட்டார். ★★★

With best compilments from:

Mfg. Lic. No. 5/64 Phone: 2243

*Thiruvalluvar Handlooms*

RAJAPALAYAM-626117.

Manufacturers of Absorbent Gauze & Bandages and allied Surgical Dressings-Approved Suppliers to D. G. S. & D., D. G. H. S. of Govt. of India and other State Govt. and Railways.

★ ★ ★

Phone: 2672

GANESHRAM PLASTICS
1109-D Srivilliputtur Road,
RAJAPALAYAM.

Manufacturers of Pulythene Bags, Tubes, Rolls and Sheets in various colours.

With the best compliments
of

MADRAS CEMENTS LTD
RAMCO BRAND
PORTLAND CEMENT

# MADRAS CEMENTS LTD.,

Manufacturers of the famous

**RAMCO**

BRAND
CEMENT

Hegd. Office:
'Ramamandiram,
Rajapalayam-626117

Factory:
RamasamyRaja Nagar-626204
Thulukkapatti R.S.

Scanned with CamScanner

இரா. நாராயணன்
புகுமுகவகுப்பு

## தலைவா நின்புகழ் மறையாது!

உலகிற் பிறந்தவர் பலகோடி—அதில்
உழைத்து வாழ்பவர் சிலகோடி!
நிலவும் சூழ்நிலை மாற்றுதற்கு -இனி
நின்போல் தலைவரும் பிறப்பாரோ?

மலையின் செழுமையில் பூத்திருக்கும்—எழில்
நீலக் குறிஞ்சியின் பேரழகே!
ஞாலம் இருந்தது உனைநம்பி--கொடும்
காலன் வலையினில் ஏன்விழுந்தாய்?

தமிழன் நெஞ்சம் மகிழ்ந்திடவே—தமிழ்த்
தாயின் வயிற்றில் பிறந்தாயே!
இமயம் வரைக்கும் புகழ்ந்திடவே—பல
இனிமைச் சாதனை புரிந்தாயே

காசி மீது ஆசையின்றி—எந்தக்
காலத்தும் உயிர்கள் இருந்திடுமோ?
தூசின் சமமாய் அதைநினைத்த—உனைத்
துதிக்கவும் மனது மறந்திடுமோ?

பிறந்தவர் ஒருநாள் இறந்திடுவார்—இந்தப்
பிணிசேர் உடலைத் துறந்திடுவார்!
மறந்தும் நின்புகழ் மறையாது—இனி
மருவிடும் காலத்தும் மறையாது!

காந்திய வழியினில் தான்நடந்த—உனைக்
கண்டதும் கரங்கள் உடன் வணங்கும்!
தொந்திக் கணபதி அருளாலே—என்றும்
தொடர்ந்திட வேண்டும் நின்புகழே!

---

# சிந்தித்துச் செயல்பட வேண்டாமா!

பி. கோபாலகிருஷ்ணன்
I பி. காம்.

காற்றிற்கு அன்று போகம், மழைக்கு வேகம், விண்ணிற்கு மோகம். காற்று சுழன்றடித்துக் கொடிகளையும் கூரைகளையும் பிய்த்தெரிந்து பேயாட்டமாடியது. மழையோ விண்ணைப் பிளந்து மண்ணை அளந்து, அன்பு இழந்து, இடியைப் பொழிந்து தாயாட்டமாடியது. நாழிகை நகர்ந்தது ஆனால் சூழ்நிலை நகரவில்லை. திடீரென புதியதோர் சப்தம் அது பறையின் சப்தம். மக்கள் சாளரத்தின் வழியாக எட்டிப்பார்த்தனர். "மக்களே கடலின் சீற்ற மிகுந்து கடற்கோள் ஏற்பட்டுள்ளது. பக்கத்துச் சிற்றூரை அழித்தும் விட்டது நம் நகர் மீதும் புகலாம்"

ஆம் அந்த நேரத்தில் வீடு இழந்தவர் தான் சுப்பிரமணியம், ஐயோ பாவம், உரித்துக் காயப்போட்ட வாழை மட்டை போல் உடம்பு, நீர்வற்றிய குளம் போல் வறண்டு கிடக்கும் கண்கள், பந்தாட்ட மைதானத்தில் முளைத்துத் தண்ணீர் இல்லாமல் வாடும் புற்களைப் போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்திருக்கும் நரை மயிர்கள், கால நதி ஓடி முடிந்து வண்டல் மண் தெளிந்து படம் போட்ட கன்னங்கள் குழந்தைப் பருவம் மீண்டது போல் பல்லில்லாத வாய், இடுப்பிலே அழுக்கு படிந்த ஒரு வெற்றிலைப் பை இத்தனையும் சேர்ந்து சுப்பிரமணியம் ஒரு பரம்பரை ஏழை என்று சாட்சி சொல்ல தயாரகக்காத்திருந்தது.

இந்த வறுமைப் புயலிருந்து தப்பவும், தன் அழகே உருவான பதினெட்டு வயது நிரம்பிய இளமங்கையான மகள் விமலாவை கரையேற்றவேண்டும் என்ற கவலையும் அவரை ஆட்டி படைக்கிறது. அந்த வறுமையிலிருந்து தப்புவதற்கு என்ன தொழில் செய்யலாம் என்று சிந்திக்காமலும், அவ்விடத்தில் சிந்தனைக்கு முதலிடம் கொடுக்காமலும் தான் கடன் வாங்கப்போகும் ஆள் எப்படிப்பட்டவர் என்பதைச் சிந்திக்காமலும், அவ்வூர் பண்ணையாரிடம் சென்று ஐநூறு ரூபாய் கடன் வாங்குகிறார்.

நாட்கள் பல ஓடி மறைகின்றன. ஆனால் தனக்குக் கொடுக்க வேண்டிய கடனை மறப்பாரா! பண்ணையார், சுப்பிரமணியத்தை நெருக்குகிறார் எனக்கு இன்னும் இரண்டு நாட்களுக்குள் பணம் வேண்டும் என்று ஆணையிட்டார். எங்கிருந்து பணம் வரும், ஒன்றும் விளங்காத சுப்பிரமணியம் அன்று இரவே பண்ணையார் வீட்டிற்குச் செல்கிறார் தன் வறுமையின் எல்லையை முடிந்த அளவு விரிவுபடுத்திக் கூறி இன்னும் இரண்டு மாதத்தில் பணம் கொடுப்பதாகக் கூறுகிறார். அந்தச் சதிகாரப் பண்ணையாரை பணத் திமிர் ஒப்புக்கொள்ள விடவில்லை. ஏய் சுப்பிரமணியம் இன்னும் இரண்டு நாட்களுக்குள் பணத்தைக் கட்ட வேண்டும் இல்லையேல் உன் மகள் விமலாவை எனக்குத்திருமணம் செய்து தரவேண்டும் என்ன சொல்லுகிறாய்? சிந்தித்துச்சொல்.

ஆ .. சிந்தித்துச் சொல்லவா? ஓ கடவுளே இந்தச் சிந்தனையில்லாமல் தானே நான் இவனிடம் முதலில்

பணத்தை வாங்கி விட்டேன் இந்தப் பணத்திற்காக என் இளமங்கை விமலாவை அறுபது வயது நிரம்பிய இந்தக் கிழவனுக்கு மணம் செய்து தரவா? முடியாது. இந்தச் சிந்தனைக்கு நான் முதலிலேயே இடம் கொடுக்கவில்லையே இறைவா! என்று புலம்பிக் கொண்டே தன் மகள் இருக்கும் இடத்தை அடைகிறேன்.

விமலா, மனிதன் ஆறறிவு படைத்தவன், பிறக்கிறான்! மறைகின்றான், அத்திப் பழத்திலே புழுப்போல சின்னால் வாழ்கின்றான்! அழிந்தொழிகின்றனன! யாது வேறுபாடுள்ளது? மனிதனும் வாழ்கின்றான், மறைகின்றான் உடலிலா? உயிரிலா? கண்டோமா வேறுபாட்டினை இல்லையே வேறு என்னவுளது! ஒன்றுளது! ஒப்பரிய ஒன்று!] அரிய ஒன்று! வலிய ஒன்று! போற்றப்படும் ஒன்று! போற்ற வேண்டிய ஒன்று! யாதென விளங்கியிருக்குமென எண்ணுகின்றேன்! ஆக்கவும், அழிக்கவும் ஆற்றல் உடையது! காக்கவும் கலைக்கவும் வல்லது! அடைந்தால் நல்லது ஆம்... அதுவே சிந்தனை.

வாழ்வில் ஒவ்வொருவரும் பெற வேண்டிய ஒன்று! வளர்க்க வேண்டிய ஒன்று! வாழ்த்த வேண்டிய ஒன்று! பெருவிடில் யார் தவறு? படைத்தவன் தவரு? பெற்றவள் தவரு? இல்லையே! இறுமாந்த இந்த இரும்பு உள்ளத்தின் தவறு, சிற்றின்பத்தைப் பேரின்பமென எண்ணி ஏமாந்த இந்த ஏழை மனதின் தவறு! தன்னைத்தானே எண்ணத் துணிந்திடின் ஏது தவறு! ஏது பூசல் பொறுமை ஏது? அழிவு ஏது. விமலா இந்தச் சமுதாயத்தில் மனிதர்களின் இயல்புதான் எத்தனை விதம்! ஐயோ இறைவா என்று கூறி அழுவது தவிர வேறு என்ன செய்ய முடியும் அந்த அப்பாவி சுப்பிரமணியத்தினால்.

Scanned with CamScanner

1 தேவைகள் குறையும் அளவுக்கே தெய்வத் தன்மை அடைவோம். —சாக்ரடீஸ்

2 எண்ணங்களின் வடிவமே எழுத்தும் மொழியும் —ஜூபர்ட்

3 அறிவு மனிதன் நண்பன் அறிவின்மை அவனது பகைவன் —டெம்பிள்

4 மனிதர்கள் இருக்கலாம் சாகலாம் ஆனல் நாகரீகம் என்றும் அழியாது —மெசின்

5 ஏன் உண்மையாக நடக்க வேண்டும்? மனிதனுயிருப்பதால் —ரஸ்கின்

6 உடல் ஆரோக்கியமே நமது செல்வம் —எமர்சன்

7 மரங்களில் தோன்றும் இலைகள் போன்றது மனித வாழ்வு —ஹோமர்

8 மனிதன் இறப்பதற்கு தகுந்த இடம் மற்றவர்களுக்காக இறக்குமிடமே —பாரி

9 பிறர் பாரத்தை தாங்கக் கைகொடுத்தால் நம்பாரம் கனம் குறையும் —அவ்பரி

10 மகிழ்ச்சியுடையவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவனுவான் — இங்கர்சால்

11 பொய்க்கல்வி பெருமை பேசும்; மெய்க்கல்வி பணிவு சொல்லும் —ரஸ்கின்

12 ஆழ்ந்த அன்பிலேயே உயர்ந்த உண்மை மலர்கிறது —ஹீன்

# விதி பற்றிய திருவள்ளுவன் கருத்து

நெ. பீட்டர் தியாகராஜன்
புகுமுக வகுப்பு

முன்னுரை :- ஊழ்! இதற்குப் பொருள் விதி! இந்த இரண்டெடுத்துச் சொல் விளைவிக்கும் வியப்போ விபரீதமோ ஒப்பற்றது. அது சிரித்தால் மக்கள் அழுவர், மக்கள் சிரிக்கத் தொடங்கிவிட்டால் அது அழும். விதியை வென்றவர்கள் மிகச் சிலர். ஆனால் அந்த விதி வென்றவர்களோ மிகப் பலர். விதி வலிமையானது, அதையாரலும் வெல்ல முடியாது. அதன் ஆற்றலுக்கு முன்னே எத்தகைய அறிஞரும், பெரியோரும் அடிமையாக வேண்டியதுதான் என்று உலக மக்கள் கூறுவர் விதியைப்பற்றி கூறும் புராணங்களும், காப்பியங்களும் ஏராளமாக இருக்கின்றன. வள்ளுவரும் இக் கருத்தைப் பற்றி ஓர் அதிகாரத்தையே பாடியிருக்கிறார், தூங்கி கிடக்கும் மனிதனுக்குத் துணிவையும் துடிப்பையும் இரண்டடிப் பாடல்களால் ஏற்படுத்துகின்ற வள்ளுவன், விதி என்ற சம்மட்டியால் நம் தலையில் ஓங்கி அடிப்பதன் காரணத்தை நாம் சற்றே சிந்திக்க வேண்டாமா?

பொருளுரை:- முயற்சியால் பொருளைத் தேடிக் கொள்வதற்கும், சோம்பலால் தேடிய பொருளை இழந்து, வறுமையடைவதற்கும், மனிதன் காரணமல்ல விதிதான் காரணமென்று வள்ளுவர் பேசுகிறார். நூலறிவும் விதிப்படிதான்; செல்வமும் வறுமையும் கூட அப்படித்தான், என்றும் கூறுகிறார்.

எப்படியானாலும் தெய்வம் வகுத்த வழியே எப்பாடுபட்டாலும், 'ஊழை' விலக்க முடியாது, அதற்காக எடுத்துக் கொள்கின்ற முயற்சிகள் பயனடையா. விதியோ வலிமையுடையது என்று வள்ளுவன் கூறுகின்றான் என்பதற்காக சும்மா இருந்து விட முடியுமா? அப்படி மனிதன் இருந்திருந்தால் இன்றைய உலகம் ஏது? இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிகள் ஏது? எதுவுமே நடந்திருக்க முடியாது! ஆதி மனித வாழ்க்கை அப்படியே தொடர்ந்திருக்கும். மனிதன் வானத்தில் பறந்திருக்க மாட்டான் அலை கடலைக் கடந்திருக்க மாட்டான். எதுவுமே நடந்திருக்க முடியாது அதற்குக் காரணம்தான் என்ன? மனிதன் விதியை மூட்டை கட்டி வைத்து விட்டான் என்று தான் பொருள். இல்லை! இல்லை! இல்லவே இல்லை அதை மூட்டை கட்டி ஓடும் நதியிலே வீசி எறிந்து விட்டான் என்று தான் பொருள்.

வள்ளுவன் தொடையையும் கிள்ளி விட்டு தூங்குவதற்காக தொட்டிலையும் ஆட்டி விடுகிறான். ஆள்வினையுடைமை பற்றி வலிந்து, வலிந்து, பேசுகிறான். வகையாய் தொகையாய் பல கருத்துக்களைத் தேன் மழையாய் கொட்டுகிறான்.

இடைவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்க. அதனால் இன்பம் ஏற்படும் என்றும் விளக்குகிறான் வள்ளுவன். இதை மனிதனால் நம்பவே முடியவில்லை! விதியின் வலிமையைப்பற்றி அழகாய்ப் பேசிய

Scanned with CamScanner

வள்ளுவன் ''முயற்சி திருவினையாக்கும்'' என்றும் கூறுகிறான். இதை யாரலும் நம்ப முடியாது. அதனால்தான் இந்தப் பாடலின் இறுதியிலே விதியையும் வெல்ல லாம் என்று வெளிப்படையாகவே கூறு கின்றார். விதியையும் புறங்காண முடியும் என்றார் தாழ்வில்லாத தொடர்ந்து முயற்சி விதி என்ற கோட்டையை உடைத்தெறி யும், அம்பாக மாறும் என்கிறான்.

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாது உஞற்றபவர்,'' என்பதுவே அந்தப் பாடல். எனவே இனிமேல் விதியைப் பற்றி பேசி மதி இழக்க வேண்டியதில்லை. விதியையும் வெல்லுகின்ற ஆற்றல் நமக்கு இருக்கி றது. கடலில் அலை இருப்பதைப் போல விதி என்ற ஒன்று இருப்பதாகக் கொண் டாலும் சரி, கடலில் அலை இருப்பதைக் கண்டு நாம் படகோட்டாமல் இருப்ப தில்லை. எனவே விதி வலியது, விதியை யாராலும் வெல்ல முடியாது என்று வேதாந்தம் பேசிக் கொண்டிருக்க நேர மில்லை. அயராது உழைக்கின்றவனும், தடையை மீறி பீடு நடைபோடுகின்ற எவனும் இன்பம் அடைவான் என்பது அறிவுலகம் நிலை நாட்டியுள்ள உண்மை என்றாலும் விதி ஒருவனை தொடருமாயின் இயேசுகிறிஸ்து கூறுகின்ற மாதிரி சோத னையை, (விதி) பொறுமையே சகிக்கின்ற மனுஷன் பாக்கியவான்'' என்று கூறி னார். இந்த இணையற்ற பாக்கியத்தைப் பெற ஒருவன் பொறுமையை தரிக்க வேண்டும். அப்போது விதி நம்மை விட்டு விலகும்

முடிவுரை :- புகழ்பெற்ற கவிஞன் ஒருவன் ''விதி என்று எதுவுமில்லை என்று கூறுகின்றான். விதியை மதியால் வெல்ல லாம்'' என்பது பழமொழி இவற்றை எல்லாம் மனத்தில் கொள்ள வேண்டியது இன்றைய மாணவர் மற்றும் மக்கள் சமுதாயதித்ன் கடமை. வள்ளுவழி நில் லுங்கள் தொடர்ந்து - அயராது முயற்சி ''பாக்கியம்'' என்னும் இணையற்ற பொக் கிஷத்தை ஒருவனுக்கு கொண்டு வரும் வாழ்க மக்கள் சமுதாயம்! வளர்க வான் புகழ் வள்ளுவன் புகழ்கள்! என்றும் நின்று வாழ்க அவன் குறளும் பொருளும்!!!

Scanned with CamScanner

# நூற்றாண்டு விழா காணும் தலைவர்கள்

R. P. கௌதமன்,
III. பி. காம்

## இராசாசி

அரசியல் சாணக் கியரே !
அறிவியல் மூத்த வரே !
அடக்கத்தின் சிறப் பிடமே !
அன்பின் மறு உருவே !

தொரப் பள்ளியில் பிறந்து
'தொரை' போல் வாழ்ந் தவரே !
குலக்கல்வித் திட்டம் கொணர்ந்து
குலைநடுங் காத வரே !

கருணை உள்ளம் படைத்திட்ட
கயமை வாதிகளை விரட்டிட்ட
கருப்புக் கொடி ஒழித்திட்ட
கவர்னர் ஜென ரலே!

பெரிய உள்ளம் பெற்றவரே
பெரியா ரின்சீரிய நண்பரே !
சுதந்திரக் கருத்துக் களையுடைய
சுதந்திர(ா)த் தலை வரே !

குடிமக் களின் நண்பரே !
குண நலனில் பெரியோரே !
குன்றில் இட்ட விளக்காய்
இராசாசி நீர் வாழ்க !

Scanned with CamScanner

# கருணையில்லாக் கடவுள் (கவிதை)

ந. சிவகாமிநாதன்
புகுமுக வகு..

காளத்தில் வண்டுஒன்று கண்கவர் மலர்நுழைந்து
தனதுவாய் மதுவுண்டு தன்னிலை மறந்துபாடியது
கானம்கேட்டு மயங்கிப்போய் தவளையும் தாளம்சேர்த்தது
தேன்மதுர இசையாகஇது தெவிட்டாமல் ஒலிக்கும்போது
கண்டதாம் கடல்காற்று கானம்கேட்டுவிரை ந்திடவே-
கண்டமரம் செடியெல்லாம் கண்டபடி சிதைந்திடவே
காடனைத்தும் மூழ்கும்போது தவளைவண்டு தப்பிடுமா ?
கடவுளின் பார்வையிலே கருணையே இருக்காதா ?

சூல்கொண்ட மேகம்தனைச் சூதில்லா மயில்கண்டு
கால்பரப்பிக் கலாபம்விரித்துக் களிப்போடு ஆடியது.
மேல்நின்று ரசித்தகுயில் கூடவே பாடியது
பால்சேர்ந்த தேனாக பாடல்ஆடல் இனிக்கும்போது
சுந்தரக் காட்சிகண்டு சூரைக்காற்று சூழ்ந்திடவே
நந்தவனச் செடிமுதலாய் நல்லதேக்குமரம்கூட நசிந்தனவே!
காடனைத்தையும் அழிக்கும்போது மயில்,குயிலை மறந்திடுமா ?
கடவுளின் பார்வையிலே கருணையே இருக்காதா ?

பட்டுமெத்தை விரிப்புவீடு கட்டிவிட்டோம் என்றுகூவி
சிட்டுஒன்று சிறகுவிரித்துச் சிந்தைமகிழ்ந்து பறந்தது
தொட்டுபேசும் மனைவியொடுஅங்கு மறுநாள்குடி புகுந்தது
பொட்டுப்போட்ட பொற்குடத்தில் பொங்கும்மகிழ்ச்சி தங்கியது
புள்ளிமானைக் கண்டபுலியெனப் புயற்காற்று புறப்படவே
அள்ளிவீசிய காற்றினிலே அவ்வளவும் அழிந்தனவே !

கடவுளின் படைப்புத்திறனால் கவின்மிகுஉலகு உண்டாக
கடவுளின் படைப்பில்ஒன்று மற்றதை அழிக்கும்போது
படைப்புக்களின் பரிதவிப்பை வேடிக்கைபார்த்து மகிழும்
கடவுளின் பார்வையிலே கருணையே இருக்காதா ?

Scanned with CamScanner

# எங்கு நோக்கினும் வேலை இல்லை (கவிதை)

ந. சிவகாமிநாதன்
புகுமுக வகுப்பு

எங்கு நோக்கினும் வேலைஇல்லை ! - இது
இருபதாம் நூற்றாண்டின் பழமைச் சொல்லே !

கற்றிடவா என்று கதறிக் கத்திடுவார் - நாம்
கற்றுவிட்டால் வேலை காலி இல்லை என்பார் !

கற்கின்றவரோ நிலை கலங்கி விட்டார்—கற்று
நிற்கின்றவரோ வேலையென்றால் 'விலை என்ன?' என்பார்!

வேலை செய்வோர் உரிமைவேண்டி அதைநிறுத்தம் செய்தால் - இறுதி
வேளை வரும் வேலைக்கு !' என்று திருத்தம் செய்வார் !

பொருள் சேர்த்து விட்டு பொழுதை வீணடிப்பார் - சிலர்
இருள் சேர்த்து விட்டு துவண்டு துடிப்பதை அறியாமலே !

பொழுது போகாது என்று சிலர் எங்கும் அலைந்திடுவார் - இவர்
'போதாத பொழுது' என்று நிலைகுழைந்திடுவார் !

படித்தவரெல்லாம் பாழ் அடைந்திடு முன் - அப்பா
பரமபிதா அவருக்கு வேலை தந்து துன்பம் துடைத்துவிடு !

கொதித்தவர் எழும்பி வந்துவிட்டால் - உன்னை
மிதிப்பது என்பதே அவர் வேலை ஆகிவிடும் !



# இரு சொல் அலங்காரம்

பி. ஜெனர்த்தனன்
III பி.காட்

| | | |
|---|---|---|
| 1 | பாயாசம் மணப்பது ஏன் ?<br>தங்கம் விலை ஏறுவது ஏன் ? | ஏலத்தால் |
| 2 | வாழ்வு முடிவது ஏன் ?<br>பூட்டு திறப்பது ஏன்? | 'சாவி'னால் |
| 3 | பகல் வருவது ஏன் ?<br>பனி விலகுவது ஏன் ? | உதயத்தால் |
| 4 | பங்குனி வருவது ஏன் ?<br>உள்ளம் கெடுவது ஏன் ? | 'மாசி'னால் |
| 5. | ராஜா, ரோஜாவாவது ஏன் ?<br>பாய்வது ஏன் ? | 'கொம்பால்' |
| 6 | நாதம் இசைக்கப்படுவது ஏன் ?<br>அடுப்பு எரிவது ஏன் ? | ஊதுவதால் |

# இயற்கைக்கு நிறு

ம. இராக்லாண்ட் மதுரம்
IIபி ஏ.,

ஏழை அழுகின்ற கண்ணீரே
மழையாகப் பொழிகின்றது. — அவன்
நாளும் விடுகின்ற பெருமூச்சே
முகிலாக அலைகின்றது!

பெண்ணின் உள்ளம் விழுந்த கவலைகளே
பெருங்கடலாய் உருவானது — அவள்
மண்ணில் அடைகின்ற இடர்ப்பாடே
மலையாக நிற்கிறது!

அறிஞர் உதிக்கின்ற எண்ணமதே
விண்ணாக விரிவானது — அவர்
நெறியில் கிடைக்கின்ற நல்வாழ்வே
ஒளியாக உருவானது!

குழந்தை சிரிக்கின்ற எழில்சிரிப்பே
நிலவாகத் தெரிகிறது — அதன்
அழகு இதயத்தின் வளமன்றோ
வெள்ளை நிறமானது.

# நீர்காத்த (கண்) ணீர்.

ந. சிவகாமிநாதன்
புகுமுகவகுப்பு

"மக உடல்ல உயிரு இருக்குதோ— போயிட்டுதோ?— ஆனா இந்தக் கிராமத்தில தன்னையே நம்பி நிம்மதியாகத் தூங்கும் ஆருயிரம் மக்களின் உயிர் அப்போது தன் கையில் இருப்பதை அவர் உணர்ந்தார்."

—சிறு கதை—

மூன்று நாட்களாக விடாத பேய் மழை! அந்தச் சின்னக் கிராமத்திற்குள் வெள்ளம் எப்போது புகுமோ என்று எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள். மாரியம்மன்கோயில் பூசாரியும் ஏதேதோ மந்திரங்களை ஓதிப் பார்த்து விட்டார்! மழை ஓய்ந்தபாடில்லை; மாருக வலுத்தது! இரவு மணி 9-30. காளியப்பன் கம்பளியை எடுத்து உடலை மறைத்துக் கொண்டார். ஒரு கையில் அரிக்கேன் விளக்கையும், மறுகையில் 'பாராக்' கம்புடனும் கண்மாய்க் கரை காவலுக்குப் புறப்பட்டார். ஒரே இருட்டு. 'பளிச், பளிச்' சென்று பாதி உயிர் போகும் நிலையில் மின்னும் 'டியூப் லைட்டை'ப் போல மின்னலடித்தது. லாந்தர் விளக்கில் தண்ணியேறி விடாதவாறு விளக்கையும் கம்பளியின் அணைப்பில் பாதுகாத்தார்.

"அண்ணே!— நம்ம கண்மாய்ல கீழக்கரை விரிசல் கண்டு தண்ணி ஒழுகுதாம் விரசா வாங்க!"

என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார். ஓட்டமும் நடையுமாகக் கீழக்கரையை அடைந்தபோது அங்கு...... வேறு எந்தவித ஓசையுமின்றி இருட்டுப் பூச்சிகளும், மழையின் ஓலமுமே கேட்டன. அப்போதுதான் எவனோ பொய் சொல்லி ஏமாற்றி விட்டான் என்று புரிந்தது.

யார் சொல்லியிருப்பார்கள்? ஏன் பொய் சொல்ல வேண்டும்? என்ற கேள்விகள் அவர் ; நிம்மதியைக் குலைத்தன. ஓஹோ!... அப்படியும் இருக்குமோ?... இருக்கும்!—

நம்ம கிராமம் விளைச்சலில் வட்டாரத்துலயே முதல் பரிசு வாங்கிட்டதுன்னு பக்கத்துப் பள்ளிப்பட்டிக்காரங்களுக்கு ஏகமாகப் பொருமை! இந்த வருசமாவது தான் பரிசு வாங்க நெனச்சு நல்லா விளைஞ்சிருக்க கதிரு கண்ணிகளை, நம்ம கிராமத்தையை தண்ணில மூங்க வைக்

கரேன்னு சொன்னுங்களாம். ஒருவேளை.. நினைக்கவே காளியப்பனுக்குப் புல்லரித்தது. தெக்கு மடையை உடைச்சுட்டா ஊருக்குள்ளே தண்ணி புகுந்துடும்.. 'அதனுலதான் தன்னைத் தெக்குமடைப் பக்கம் வரவிடாம கிழக்குப் பக்கமா திசை திருப்பி விட்டிருப்பானுக!' என்று மனம் பதறியது. கால் கரைவழியே வேகமாகத் தெற்கு மேட்டை நோக்கி ஓடத் தொடங்கியது.

தெக்கு மடைப்பக்கம் நெருங்கியதும் அவருக்குப் பழக்கமான குரலின்... "ஐயோ! அப்பா!..." என்ற ஓலம் அவரைத் திடுக்கிடச்செய்தது. நிச்சயம் அவருடைய மகள் ரெங்காத்தாவின் குரலே தான்! வருத தையிலே கண்ணுலத்துக்குத் தயாராக வேண்டிய பொண்ணு— பணமில்லாம பரிதவித்துக் கொண்டிருந்தார்.

குரல் வந்த திக்கை நோக்கி ஓடினுர் காளியப்பன். அழுக்கடைந்த பிடாரி கோயிலில்... பளீரென்று வெட்டிய மின்னலில் அவர் கண்ட காட்சி—

ரெங்காத்தா அலங்கோலமாய் கிழிந்த உடையில் பள்ளிப்பட்டி 'ரௌடி' கருப்பணுவுடன் 'போராடிக்' கொண்டு இருந்தாள். காளியப்பனுக்கு ரத்தம் கொதித்தது. 'பாராக் கம்பைத் தூக்கிக் கொண்டு பிடாரி கோவிலுக்கு விரைந்தார். கருப்பணுதான் குரல் கொடுத்துத் தன்னைத் திசை திருப்பிவிட்டு.. வழக்கமா சாப்பாடு கொண்டுவரும் ரெங்காத்தாவைக் கெடுக்கத் திட்டமிட்டு இருந்தானென்பது காளியப்பனுக்கு வெட்ட வெளிச்சமாகி விட்டது.

'டேய் கருப்பணு!' என்று அலறியபடி வெறியில் கம்பைத் தூக்கி பின்புறமிருந்து ஒரே அடி— அவ்வளவுதான். குரல் கேட்ட உடனே கருப்பணு விலகிக் கொள்ள — ரெங்காத்தாவின் தலை பிளந்து இரத்தம் சிதறியது— கருப்பணு ஓட்டம் பிடித்தான்.

பித்தம் பிடித்தவராகக் காளியப்பன் சிலையென நின்றுவிட்டார்...ரெங்காத்தா அலறியபடி விழுந்தாள்,

> "அப்பா!— நான்பொழைக்க மாட்டேன்!— கருப்பணு- தெக்குமடையில் பள்ளங் கீறியிருக்கிருன்—தடுத்தேன்— சீக்கிரம் தண்ணியை அடை—"

தை மாசம் பரிசம் போட வேண்டிய பெண்ணின் தலை சாய்ந்தது, காளியப்பன் என்ன செய்வான்— ரெங்காத்தாவைப் பொழைக்க வைப்பதா? கருப்பணுவைப் பிடிப்பதா?—மக்களை மூழ்கவைக்க இருக்கும் தெக்குமடைப் பள்ளத்தை அடைக்கவா?...

முடிவில் பிள்ளைப்பாசமே வென்றது. ரெங்காத்தாவைத் தோளில் போட்டுக் கொண்டு கரைவழியே நடக்க ஆரம்பித்தார்.

மடைப்பக்கம் போனபோது வேகமாகச் செல்லும் நீரின் 'சல சல' ஒலி கேட்கவே திரும்பிப்பார்த்தார். கருப்பணு வெட்டிய கீறலிருந்து நீர் 'பிச்சுக் கொண்டு வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தது. ஒருகணம்தான் காளியப்பன் யோசித்தார்— 'மக உடல்ல உசிரு

இருக்குதோ— போயிட்டுதோ?— ஆறு இந்தக் கிராமத்தில தன்னையே நம்பி நிம்மதியாகத் தூங்கும் ஆருயிரம் பேரின் உயிர் அப்போது தன் கையில் இருப்பதை உணர்ந்தார்'. ரெங்காத்தாவின் 'உடலை'க் கீழே இறக்கி வைத்துவிட்டு பள்ளத்தை அடைக்க பாறைகளைத்தேடினார். 'பாவிப்பயல்!' பாத்துட்டா பள்ளத்த அடைச்சிருவாங்கன்னு நெனைச்சு சுத்தி— எங்கயும் ஒரு 'ஓட்டுத் துண்டைக்' கூட விட்டு வைக்கவில்லை!, காளியப்பனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை— பள்ளத்தின் வாய் பெரிதாகிக் கொண்டே வந்தது. மணலைக் கொண்டு அடைக்க முடியாது— பள்ளத்தில் இருந்துவரும் தண்ணியை இரு கைகளாலும் மூடி அடைத்துப் பார்த்தார்... மூடியவில்லை.

திடீரென்று ஒருயோசனை! 'கல்லுக்' கிடைக்காமல் ,உடைந்து' போன தன் மனதைப் 'பாறையாக' மாற்றிக் கொண்டார் காளியப்பன். அவர் செய்யப்போகும் செயல்... கிராமத்தையே காப்பாற்றி விடும். அவருக்குப் புகழும் கிடைக்கப் போகிறது—

விரைவாக எழுந்த காளியப்பன் ரெங்காத்தாவின் 'உடலைத்' தூக்கிவந்து பள்ளத்தில் படுக்க வைத்தார். சுதந்திரமாக வெளியேறிக் கொண்டிருந்த தண்ணீர் 'பெட்டிப் பாம்பாக' அடங்கியது. ஓரத்தில் இருந்துவரும் ஒழுகல்களை மகளின் 'உடலோடு' மண்ணைச் சேர்த்துப் பூசி அடைத்தார்!. இராப்பூரா காவல் இருந்து தண்ணி ஒழுகாமப் பார்த்துக்கிட்டு காலையில் கிராமத்து ஆட்களைக்கூப்பிடுவோமென்று எண்ணினார். 'படபட'வென்ற இடியோசையும், மழையின் வேகமும் சற்றுத் தணிந்திருந்தன.

'பளீ'ரென்று வெட்டிய மின்னலில் பள்ளத்தில் மண்மூடி , 'இறந்தும் பயன்பட்ட' தன் மகளின் 'உடலைப்' பார்த்த போது.. உயிருக்குயிரான தன் ஒரே மகளை இழந்தாலும் ஊர்மக்கள் ஆருயிரம் பேரைக் காப்பாற்றிவிட்டோம்!என்ற 'நிம்மதியான எண்ணம்', நின்றுவிட்ட மழை நீரோடு, நிற்காத கண்ணீர்த் துளிகளையும் அவர் உடலில் கரைத்து, அவர் நெஞ்சத்தை நிறைவு செய்தது!

Scanned with CamScanner

# வாழ்வின் வெற்றிக்கு வழிகள்

K. கணேசன்
I பி. காம்.

1) உனக்காக வாழ்க்கை நடத்தாதே ; சமுதாயத்திற்காக வாழ்க்கை நடத்து. உன்னுடைய வாழ்வின் வெற்றியை சமுதாயம் தானாக நிர்ணயித்து விடும்.

2) எப்போதும் துயர சிந்தனைகளுடன் உழல்பவன் என்ன பாடுபட்டாலும் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது.

3) பேச்சு அளவோடு இருப்பது நல்லது. அளவாகப் பேசும் போது அறிவோடும் பேச வேண்டும். அறிவும் அளவுந்தான் பேச்சுக்கு மதிப்பையும் மரியாதையையும் தோற்றுவிக்கும்.

4) உடல் நோய்வாய்ப்பட்டால் மனமும் நோய்வாய்ப்படுகிறது. மனத்திலே நோய் பிடித்தால் செயலிலே எப்படி ஆரோக்கியம் மிளிரும் ? செயலிலே தெம்பு இல்லாவிட்டால் முன்னேற்ற வேகம் தடைபடுமே!

5) குற்ற மனப்பான்மையுள்ளவர்களுக்கும், கவலைப்பட்டவர்களுக்கும், சிந்தனைவாதிகளான அறிஞர்களுக்கும் எளிதில் உறக்கம் வருவதில்லை.

6) பிறருடைய ஒத்துழைப்பை ஏற்றுக் கொள். ஆனால் பிறரைச் சார்ந்திருக்காதே! உன் சக்தியை நம்பு. வாழ்க்கையில் நீ எளிதாக உயர்வடைவாய்.

7) இளமையிலேயே முயற்சிகளில் ஈடுபடுவதால் தவறுகளையும் ஏமாற்றங்களையும் கடந்து தங்களுக்கென ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள கால அவகாசம் கிடைக்கும்.

8) கெட்ட சுபாவம் உடையவர்கள் என்று கண்டு கொண்ட பிறகு அந்த நண்பர்களை முடிந்தவரை திருத்த முயல வேண்டும். ஏனெனில் அத்தகைய நண்பர்களில் சிலர் கூட ஏதோ ஒருவகையில் உங்கள் வாழ்க்கை உயர்வுக்கு உதவக் கூடும்.

WITH BEST COMPLIMENTS FROM:-

Phone No. 478

**RAJAN & CO.,**

SUVISESHAMTHUVATHIAR STREET,

**SIVAKASI.**

Manufacturers of :

**Offset Negatives**

★

**Film Negatives**

★

**Blocks**

★

**Rubber Stamps**

**and**

**Cinema Slides**

9) சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டிராதே. சலியாமல் உழை. சந்தர்ப்பம் தானாக வரும்.

10) செய்யும் தொழிலை திருத்தமாக செய்து பழக்கப்பட்டவனுக்கு நிச்சயமாக ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

11) மனத்துக்கு சற்றும் பிடிக்காத வேலையில் ஈடுபட்டு உழைக்கும் போது வேலையில் திருத்தமும் ஒழுங்கும் இருக்காது.

12) பிறரைப் பார்த்து காப்பியடித்தே செயற்படும் வழக்கம் காரணமாக செய்யும் தொழிலில் தங்களுக்கென தனித்தன்மையும், தனிப்பாணியும் ஏற்படாமல் போய் விடும்.

13) எதற்கெடுத்தாலும் அச்சப்படுவது நம்மை நாமே வீழ்த்திக் கொள்வதற்கு ஒப்பாகும்.

14) மனிதன் தான் தெரிந்து செய்த - அல்லது தன்சக்திக்கு மேற்பட்டதாகக் கருதுகிற செயலின் தவறை மறைக்கவே விதி, விதி என்று ஓலமிடுகிறான்,

15) சக்தி, மன வலிமை, துணிச்சல், விடா முயற்சி ஆகிய இவை முன்னேற்ற காலத்தை நோக்கிப் பயணம் செல்ல உதவும் வேகம் நிறைந்த போக்குவரத்துச் சாதனங்கள்.

Scanned with CamScanner

*With best compliments from :-*

# THE SOUTH INDIA BANK LTD., (Tinnevelly)

(Regd. Office : 62, East Car Street)

TIRUNELVELI TOWN - 627 006.

---

We offer $\frac{1}{4}$% interest more for Savings Bank
And
Term Deposits

Recurring Deposits and other attractive remunerative schemes offered to suit every one.

LAY ONE HATCH THREE SCHEME
(Akin to pension Scheme)
Invest Rs. 100/- per mensem and receive about thrice the amount per mensem for 11 years.

Our { CASH CERTIFICATES, PLATINUM JUBILEE CERTIFICATES } attractive ideal gift for special occasions.

Bank with SOUTH INDIA BANK LTD., for
Quick Service with a smile
Branches all over Tamilnadu

# விநோத கணிதம்

கி ராமனுஜம்,
I பி. காம்.

I **பல்சக்கரங்கள் :-** எட்டுப் பற்களை கொண்ட ஒரு பல் சக்கரம் 24 பற்களைக் கொண்ட மற்றொன்றுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. பெரிய சக்கரத்தை ஒரு தரம் சிறியது அதன் அச்சை மையமாகக் கொண்டு எத்தனைச் சுற்றுக்கள் சுற்ற வேண்டும் ?

II **சங்கிலி :-** ஒவ்வொன்றிலும் மூன்று சங்கிலி வளையங்களைக் கொண்ட ஐந்து துண்டுகள் சங்கிலியை ஒருவர் கொல்லரிடம் கொண்டு வந்து கொடுத்து ஒன்றாய் இணைத்துத் தரச் சொல்கிறார். கொல்லர் நன்றாகச் சிந்தித்து நான்கு வளையங்களை வெட்டி இணைப்பது என்று முடிவெடுக்கிறார் ?இன்னும் குறைவான சங்கிலிகளை வெட்டி இணைக்க முடியுமா ?

III **விமானம் :-** 12 மீட்டர் இறக்கை வீச்சையுடைய ஒரு விமானம் நேரே தலைக்கு மேல் பறந்த போழுது புகைப்படம் பிடிக்கப்பட்டது. புகைப்படக் காமிராவின் ஆழம் 12 செ. மீ. புகைப்படத்தில் விமானம் 8 மி. மீ. இறக்கை வீச்சுடையதாய் இருந்தது. படம் பிடிக்கப்பட்ட போது விமானம் எவ்வளவு உயரத்தில் பறந்தது.

IV **கடிகார முகப்பு :-** கடிகார முகப்பை எந்த வடிவத்திலுமான 6 துண்டுகளாய்ப் பிரிக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு துண்டிலும் எண்களின் கூட்டுத்தொகை மாறக் கூடாது. உங்களால் முடியுமா ?

V **ரயில் டிக்கட்கள் :-** ரயிலில் சென்று டிக்கட் விற்பதை எளிதான காரியம் என்று நினைக்கிறார்கள். ஒரு சிறிய ரயில் பாதையிலும் எத்தனை வகையான டிக்கெட்டுகள் விற்க வேண்டியிருக்கிறது என்பதை இவர்கள் ஆலோசித்து பார்பதில்லை. ரயில் பாதையில் 25 நிலையங்கள் இருக்கின்றன. இந்தப் பாதையில் இரு திசைகளிலும் செல்லுகையில் ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் ஏனைய ஒவ்வொரு நிலையத்திக்கும் வெவ்வேறு டிக்கெட்டுகளை விற்க வேண்டியிருக்கிறது. அந்தப் பாதையில் விற்கும் டிக்கெட்டுகள் எத்தனை வகையானவை என்று சொல்லுங்கள் பார்க்கலாம் ?

IV **தலைமுடி எத்தனை :-** சராசரி மனிதன் ஒருவன் தலையிலுள்ள முடியின் எண்ணிக்கை எவ்வளவு ? எண்ணுவது மிகவும் சுலபம் ? எப்படி ?

(விடை பின்பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

# விடை

I மூன்று தடவை என்று நன்றாகச் சிந்தித்தே சொல்லுவீர்கள். ஆனால் இது முற்றிலும் தவறு நான்கு தடவை சுழலும். பொதுவாய் ஒரு பொருள் ஒரு வட்டத்தை சுற்றி வருகையில் நாம் எண்ணக் கூடியதைக் காட்டிலும் ஒருசுற்று அதிகமாகச் சுற்றுகிறது. சூரியனைச் சுற்றி வரும் பூமியானது அதன் அச்சை மையமாக கொண்டு 365¼ நாட்கள் சுற்றாமல் 366¼ நாட்கள் சுற்றுவதற்கும் இதுவே தான் காரணம்.

II நான்கு வளையங்களை வெட்ட வேண்டுமென்று சொல்வீர்கள் தவறு. மூன்று சங்கிலிகளை வெட்டினாலே போதுமானது. A B C வளையங்களை வெட்டி மூன்று சங்கிலிகளை இணைத்து விட நான்கு கிடைக்கிறது. கடைசியில் ஐந்தாவது சங்கிலியை மறுபடியும் 'A' யில் சேர்த்தால் இப்பொழுது ஐந்து சங்கிலிகளும் இணைந்து விடுகின்றன.

III விமானத்தின் நீள அளவுகளுக்கும் அதன் படத்தின் ஒத்த அளவுகளுக்கும் உள்ள விகிதம் காமிரா ஒளி வில்லையிலிருந்து விமானம் இருக்கும் தூரத்திற்கும் காமிரா ஆழத்துக்கும் உள்ள விகிதத்திற்குச் சமம் என்பது தெரிகிறது. X மீட்டர் பறப்பதாய் கொண்டால் விகிதச் சமன்பாடு கிடைக்கிறது.

$12,000 : 8 = x : 0.12$

ஆகவே $x = 180$ மீட்டர்

IV

$12 + 1 = 13$

$11 + 2 = 13$

$10 + 3 = 13$

$9 + 4 = 13$

$8 + 5 = 13$

$7 + 6 = 13$

V 25 நிலையங்களில் ஒவ்வொன்றிலும் வந்து ஏறும் பயணிகள் ஏனைய 24 நிலையங்களில் எதற்கு வேண்டுமானாலும் டிக்கெட்டு வாங்கலாம். ஆகவே டிக்கெட் வகைகளின் எண்ணிக்கை $= 25 \times 24 = 600$

VI தலை முடியை எப்படி எண்ணுவது என்று கேட்பீர்கள், தலையில் ஒரு சதுர சென்டி மீட்டரில் எத்தனை முடி என்று எண்ணினால் போதும். பின்பு தலையின் பரப்பளவை வரைபடத்தின் உதவியால் தெரிந்து கொண்டால் முடிகளின் மொத்த எண்ணிக்கையைச் சுலபமாய் தெரிந்து கொள்ளலாம்.

நன்றி

With the best compliments from :-

Phone No. 2898

# Sri Ananda Rama Krishna Hardwares

Dealers in: Hardware, Paint, G.I. Pipes & Cements.

Stockists: ICI Dulux Paints, Shalimar Paints & Super Snowcem Cement Paints

824, Tenkasi Road,

RAJAPALAYAM-626117.

With the best compliments from:-

# SRI GANESH IRON WORKS,

Hardware, Paint, Cement Merchant,

RAJAPALAYAM.

Our Sister Concern Phone No. 2779

சார்பு நிறுவனம்

SRI GANESH HARDWARES,

Iron & Steel Merchant,

Rajapalayam.

With the best compliments from :-



**Haran Studio**

Tenkasi Road,

RAJAPALAYAM.

*With best compliments from :-*

Phone: 2771

**BHARATH PAPER STORES**

RAJAPALAYAM.

Dealers in :

PAPER & OFFICE STATIONERY

Manufacturers of :

Account Note Book |
Envelope
Exercise School
Note Book
in Controlled Paper

Distributors For:

KORES Carbon Paper, Type Ribbon
Stencil, Duplicating Ink,
Art Materials, Printing Ink.

# மனிதனும் இறைவனும்

ம. இராக்லாண்ட் மதுரம்
II. பி. ஏ.

நடத்த நினைப்பவன் மனிதன் — அதை
நடத்தி வைப்பவன் இறைவன்

முடிக்க நினைப்பவன் மனிதன் — அதை
முடித்து வைப்பவன் இறைவன்

கண்டு பிடிப்பவன் மனிதன் — அதைக்
கண்டிடச் செய்பவன் இறைவன்

தொண்டு புரிபவன் மனிதன் — அந்தத்
தொண்டின் உருவம் இறைவன்

வாழ நினைப்பவன் மனிதன் — அவனை
வாழ வைப்பவன் இறைவன்

பாடி அலைபவன் மனிதன் — அந்தப்
பாட்டின் கருவே இறைவன்

தேடி அலைபவன் மனிதன் — அவன்
தேடும் பொருளே இறைவன்

ஈகை செய்பவன் மனிதன் — அந்த
ஈகையின் உருவம் இறைவன்

கொடியை நாடுபவன் மனிதன் — அந்தக்
கொடியின் மலர்கள் இறைவன்

செடியை நடுபவன் மனிதன் — அதன்
கனியும் காயும் இறைவன்

வீணை இசைப்பவன் மனிதன் — அந்த
வீணையின் நாதமே இறைவன்

வானை அளப்பவன் மனிதன் — அவன்
வாழ்வை அளப்பவன் இறைவன்

பாவம் செய்தவன் மனிதன். — அந்தப்
பாவத்தைப் பொறுப்போன் இறைவன்

அன்பு செலுத்துவோன் மனிதன் — அந்த
அன்பின் தலைவன் இறைவன்

இறப்பதும் பிறப்பதும் மனிதன் — ஆனால்
என்றும் இருப்பவன் இறைவன்.

Scanned with CamScanner

# அறுபத்தி நான்கு கலைகள் எவை?

து. கனகராஜ்,
I. பி. காம்

"ஆய கலைகள் அறுபத்திநான்கினையும் ஏனைய உணர்விக்கும் என் அம்மை" என்று பாடுகிறோம்! ஆதித் தமிழன் கலைகள் என்று பெருமையடிக்கின்றோம். அந்த 64 கலைகளும் எவை என்பது தெரியுமா? தெரியாவிட்டால் இதோ:-

1 அக்கிர விலக்கனம் — எழுத்துக் கூட்டும் பயிற்சி
2 இலிகிதம் — கையெழுத்துப் பயிற்சி
3 கணிதம் — எண் பயிற்சி
4 வேதம் — இந்து நெறி
5 புராணம் — இந்துக் கடவுள்களின் வரலாறு
6 வியாகரணம் — இலக்கணம்
7 நீதி சாஸ்திரம் — நீதி அறிவுத் திறன்
8 சோதிட சாஸ்திரம் — சோதிடத் திறன்
9 தரும சாஸ்திரம் — சட்டத் திறன்
10 யோக சாஸ்திரம் — யோகப் பயிற்சி
11 மந்திர சாஸ்திரம் — வேதத்தின் நடைமுறைப் பயிற்ச்சி
12 சகுண சாஸ்திரம் — சகுணம் நிமித்தம் அறிதல்
13 சிற்ப சாஸ்திரம் — சிலை அமைக்கும் பயிற்சி
14 வைத்திய சாஸ்திரம் — மருந்துக்கள் நோய்கள் பற்றிய அறிவு
15 உருவ சாஸ்திரம் — உருவத்தால் அறிதல், சாமுத்திரிகா லட்சணம்
16 இதிகாசம் — சரித்திர அறிவு
17 காஷயம் — கஷ புணையும் அறிவு
18 அலங்காரம் — அலங்கரிக்கும் பயிற்சி
19 மதுர பாடணம் — மொழித் தேர்ச்சி
20 நாடகம் — நாடகப் பயிற்சி
21 திருத்தம் — நடனப் பயிற்சி
22 சத்தப் பிரமம் — சத்தத்தைக் கொண்டு அறிதல்
23 வீணை — வீணைப் பயிற்சி
24 வேணு — புல்லாங் குழல் பயிற்சி
25 மிருதங்கம் — மிருதங்கப் பயிற்சி
26 தாளம் — கால நிர்ணயப் பயிற்சி
27 அஸ்திரப் பரீட்சை — எறியும் பயிற்சி, பாணப் பயிற்சி
28 கனகப் பரீட்சை — தங்கத்தைச் சோதிக்கும் அறிவு

29 இரத பரீட்சை — தேர் ஓட்டும் பயிற்சி
30 கஜ பரீட்சை — யானை ஏற்றம்
31 அசுவ பரீட்சை — குதிரை ஏற்றம்
32 இரத்தின பரீட்சை — இரத்தினக் கல் சோதிக்கும் திறன்
33 பூமிப் பயிற்சி — மண்ணை சோதிக்கும் திறன்
34 சங்கராம விலக்கணம் — படைகளை வழி நடத்தும் திறன்
35 மல்யுத்தம் — மல்யுத்தப் பயிற்சி
36 ஆகருடணம் — கவர்ச்சிக் கலை
37 உச்சாடணம் — பேய்களை ஏவுதல்
38 வித்து வேடணம் — வித்தையின் மூலம் அதிர்ச்சி உண்டாக்கல்
39 மதன சாஸ்திரம் — காதல் கலை
40 மோகனம் — மயங்கச் செய்யும் கலை ஹிப்னாடிஸம்
41 வசீகரணம் — மற்றவரை வசீகரித்தல்
42 இரச வாதம் — ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுதல்
43 காந்தருவ வாதம் — குழு வாத்தியப் பயிற்சி
44 பைபீல வாதம் — மிருகம், பறவை, ஊர்வன வற்றை வசீகரித்தல்.
45 கவுத்துக வாதம் — துக்கமுள்ள மனதைத் தேற்றும் பயிற்சி
46 தாது வாதம் — தாதுப் பயிற்சி
47 காருடம் — விஷத்தை முறிக்கும் பயிற்சி
48 நட்டம் — நட்டத்தை அறியும் திறன்
49 முட்டி — கை ரேகை சாஸ்திரம்
50 ஆகாயப் பிரவேசம் — ஆகாயத்தில் மறைதல்
51 ஆகாய கமணம் — ஆகாயத்தில் நடந்து செல்லல்
52 பரகாயப் பிரவேசம் — மறு உடம்பில் பிரவேசித்தல்
53 அதிரிசயம் — தானே மறைதல்
54 இந்திர ஜாலம் — அதிசயமானவற்றை வரவழைத்தல்
55 மகேந்திர ஜாலம் — ஆகாயத்திலும் பூமியிலும் அதிசயம் செய்தல்
56 அக்கினி ஸ்தம்பம் — நெருப்பில் நடத்தல்
57 ஜலஸ்தம்பம் — நீரில் நடத்தல்
58 வாயு ஸ்தம்பம் — காற்றில் நடத்தல்
59 திட்டி ஸ்தம்பம் — கண் பயிற்சி
60 வாக்கு ஸ்தம்பம் — வாய்ப் பயிற்சி
61 சுக்கில ஸ்தம்பம் — இந்திரியக் கட்டுப்பாடு
62 கன்ன ஸ்தம்பம் — மறைந்தவற்றைக் காணுதல்
63 கடக ஸ்தம்பம் — யுத்த ஆயுதங்களை வசீகரித்தல்
64 அவஸ்தை பிரயோகம் — ஆத்மாவை இயக்குதல்

# தேச பக்திப் பாடல்கள்

பா. வெங்கட்டரமணன்,
I. பி. காம்.

## 1. வளர்ந்திடும் இந்தியா

வாழ்வோமே வாழ்வோமே
புனிதபாரதத்தினிலே வாழ்வோமே
நன்றி கெட்ட நாய்களை விரட்டிடுவோமே
விரட்டிடுவோமே விரட்டிடுவோமே
தேசபக்தர்களை வாழ வைப்போமே
வாழ வைப்போமே வாழ வைப்போமே
பாரதத்தின் புகழ்பரப்ப வாழ வைப்போமே
வாழ வைப்போமே வாழ வைப்போமே
கலைகள் பல வளர்த்திடுவோமே
வளர்த்திடுவோமே வளர்த்திடுவோமே !

## 2. புகழ் பெறும் இந்தியா

பரப்பிடுவோம் பரப்பிடுவோம்
பாரதத்தின் புகழைப் பரப்பிடுவோம்
(பரப்பிடுவோம்)

தேசத் தியாகங்களை வளர்ப்போம்
தியாகிகளை வளர்த்திடுவோம்
தேசத் தியாகமே நமது பரம்பரை
தேசத் தியாகமே நமது சொத்து
நாட்டைக் காட்டிடும் துரோகியினை
அழித்திடுவோம் அழித்திடுவோம்
(பரப்பிடுவோம்)

## 3. பெருமை மிகு இந்தியா

பாரதமே பாரதமே இருபத்தி இரு மாநிலங்களை
கொண்டாயே கொண்டாயே
அறுபது கோடி சனங்களின் தொகுப்பாய்
திகழ்வாயே திகழ்வாயே
பொதுமறை கள்பல வற்றை படைத்த
பாரதமே ! நீ வாழ்வாயே ! நீ வாழ்வாயே
கங்கையையும் காவிரியையும் ஒருமைப்
படுத்தி புகழடைவாயே ! வறுமையை அழிப்பாயே !

Scanned with CamScanner